# மௌனம் கலைந்தது



குணாலினி குணரத்தினம்

வெளியீடு:
தேசிய கல்வியியற் கல்லூரி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைந்தது

செல்வி. குணாலினி குணரத்தினம்

வெளியீடு:

தேசிய கல்வியியற் கல்லூரி
ஆரம்பக் கல்வி மன்றம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : மௌனம் கலைந்தது |
| நூலாசிரியர் | : செல்வி. குணாலினி குணரத்தினம் |
| பதிப்பாசிரியர் | : திரு. செல்லையா இராமநாதன் |
| முதற் பதிப்பு | : 2016 மார்ச் |
| விலை | : 180/= |
| அச்சுப்பதிப்பு | : ஆரு பிறிண்டேர்ஸ் கல்வியன்காடு, யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : யா/தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பக் கல்வி மன்றம் |
| அட்டைப்படம் | : செ.கருணாகரன் |

## *Book Details*

| | |
|---|---|
| Title | : Mownam Kalainthathu |
| Author | : Miss.Kunalini Gunaratnam |
| Editor | : Mr. Selliah Ramanathan |
| First Edition | : 2016 March |
| Copy Right© | : Author |
| Price | : 180/= |
| Printing | : Aru Printers Kalviyankadu, Jaffna. T.P: 0772727227 |
| Publishers | : J/ National College of Education Primary Union |
| Cover Design | : S.Karunakarn |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எழுத்தறிவித்து இனிய மொழி சொல்லித்
தந்து என்னை ஆளாக்கிக் கல்வியுலகில் தடம் பதிக்க
வழிகாட்டிய எனது பெரியம்மா

## அமரர் ஆறுமுகம் தங்கராணி

03-09-2014 இல் எம்மை விட்டு விண்ணை
எட்டி விட்டார். அவரின் இனிய பாதார
விந்தங்களில் எனது இச்சிறு நூலைக் கண்ணீருடன்
காணிக்கையாக்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியரான செல்வி குணாலினி குணரத்தினம் என்பவரின் கன்னி முயற்சியில் எழுந்த "மௌனம் கலைந்தது" எனும் நூலைக் கண்ணுற்றேன். இதைப் படித்ததும் பாடசாலையில் ஆசிரியரின் வகிபங்குகள் மற்றும் சமூகத்தில் நற்பிரஜையாக வாழ்வதற்கான கருத்துக்களும் புலப்பட்டன.

இம் மாணவி கதை எழுதுவது மட்டுமல்லாது கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதும் மேடையில் சிறந்த நடிகையாகவும் தெரிவு செய்யப்பட்டவர். அவர் தனது பல்வேறுபட்ட ஆற்றல்களையும், திறன்களையும் வெளிப்படுத்தும் ஒரு மாணவராக திகழ்பவராவார். இவரது கன்னிப் படைப்பான "மௌனம் கலைந்தது" எனும் சிறுகதைத் தொகுப்பு படிப்போரின் மனதை உருக்கி வைக்கும் தன்மை வாய்ந்தது. சமூகம் சார் விழுமியப் பண்புகளையும், ஒரு நல்லாசிரியர் எனப்படுபவர் எவ்வாறிருக்க வேண்டும் என்பதற்கான வரைவிலக்கணத்தையும் அழகான சிறுகதை வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

மாணவர்கள், ஆசிரியர்களிற்கு மட்டுமன்றி யாவரும் கற்றுப் பயனுறும் வகையில் இந் நூல் படைக்கப்பட்டுள்ளது. இவரது இப் படைப்பு இத்தோடு நின்றுவிடாது மேன்மேலும் சிறந்த படைப்புக்களை சமூகத்திற்குத் தரவேண்டும் என்றும், சிறந்த சிறுகதை எழுத்தாளராக மிளிர வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

**ச. அமிர்தலிங்கம்**

பீடாதிபதி,

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உப பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பக் கல்வித்துறை முகிழ்நிலை ஆசிரியை செல்வி குணாலினி குணரத்தினம் அவர்கள் "மௌனம் கலைந்தது" என்ற தலைப்பில் சிறப்பு மிக்க சிறுகதை நூலை வெளியிட முன்வந்தமை பாராட்டுக்குரியது.

ஆக்கத்திறன் மிக்க ஆசிரியர்கள் மாணவர்கள் விரும்பும் ஆசிரியர்களாக இருப்பார்கள். என்பதற்கு அமைய செல்வி குணாலினி எதிர்காலத்தில் மிகச் சிறந்த ஆசிரியையாக உருவாகுவார் என்பதை இவரது இந்த ஆக்க முயற்சியின் ஊடாக உணரக் கூடியதாக உள்ளது.

மிகச் சிறந்த நற்பண்புகளும், விடாமுயற்சியும் உடைய செல்வி குணாலினி தமது திரட்டிய அனுபவங்களை எழுத்துருவில் சமூகத்திற்கு வெளியிடுகின்றார். அவரது வளர்ச்சிப்படியின் ஒரு மைல்கல்லாக இம் முயற்சி அமைகிறது. எதிர்காலத்தில் இது போன்ற சமூகத்திற்குப் பயன் தரவல்ல ஆக்க முயற்சிகளில் ஈடுபட எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் அவருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

**S.R. சத்தியேந்திரம்பிள்ளை**
உபபீடாதிபதி (கல்வி)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியராகிய செல்வி குணாலினி குணரத்தினம் ஆரம்பக் கல்வி நெறியில் கற்று வருகிறார். இவர் ஆற்றலுடன் ஆளுமையும் ஒருங்கேயமைந்தவராவர். தனது கற்றல் கற்பித்தலை எவ்வாறு வினைத்திறனுடன் ஆற்றுகின்றாரோ அதே போல இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் தன்னை ஓர் தனித்துவமானவராகப் பதிவு செய்பவர் அதன் ஓரங்கமாக தான் உயர்தர வகுப்பில் கற்ற காலத்தில் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து ஓர் நூலாக வெளியிடுவது வரவேற்கத் தக்கதேயாகும்.

ஈழத்தில் சிறுகதைக்கென பல தசாப்தகால வரலாறு உண்டு. இந்திய தேசத்திற்கு நிகராக ஒரு புலமைப் பாரம்பரியம் ஈழத்திலும் நீண்ட காலமாக கோலோச்சி வந்துள்ளதை காலம் அறியும், அந்த நீண்ட பாரம்பரியத்தில் ஒரு புதிய பூவாக இச் சிறுகதைத் தொகுப்பும் இடம் பிடிக்கின்றது. இது வாடாமலராக மலர்ந்து நறுமணம் பரப்ப வேண்டும்.

திருநெல்வேலிப் பிரதேசத்திலே அதாவது எனது ஊரிலே பிறந்த செல்வி குணாலினி குணரத்தினம் யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப , உயர்தர பாடசாலைகளில் கல்வி கற்று தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டவர். ஆரம்பக் கல்வி நெறி ஆசிரியராக பயிற்சி பெறும் இவர் பாட, இணைப்பாட விதானங்களிலும் சிறந்த திறனை வெளிப்படுத்துவர், கல்லூரிக் காலங்களில் தனது மனதில் பதிந்த, பாதித்திட்ட விடயங்களை சிறுகதைக் கருக்களாக ஏற்று சிறுகதைகளைப் படைத்துள்ளார்.

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி போன்றது. தான் வாழ்ந்த காலத்தில் தனது மனதில் பாதித்த விடயத்தை பதிவு செய்வது ஆகும். இச் சிறுகதை ஆசிரியரும் கல்வியுடன் சிறுகதை, கவிதை, கட்டுரை, முதலிய பல் துறைகளிலும் தடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிக்க முனைபவர். இவரது ஊரிலிருந்தே செம்பியன் செல்வன், துருவன், யாழ்நங்கை என்போர் தனியிடத்தை வகித்துத்துள்ளனர். அந்த வகையில் இவரது கன்னிப் படைப்பும் எதிர் காலத்தில் இவரை சிறந்த ஒரு படைப்பாளியாக்கி ஊருக்கு பெருமை சேர்த்திட வேண்டும்.

இவரது பதினொரு சிறுகதைகளையும் நான் வாசித்து சில திருத்தங்களுக்கு வழிப்படுத்தினேன். இவரது எழுத்துக்கள் என்னை வசீகரித்தன. அந்த வகையில் இவரது சிறுகதை இலக்கிய உலகிற்கு புதியவைகளாக அமைகின்றன. இவரது சிறுகதை இலக்கியப் பயணம் தொடர வேண்டும். தொடர்ந்து புதுப்புது மலராக இது மலர்ந்து மணம் பரப்பிட வேண்டும்.

**கலாநிதி சின்னத்தம்பி பத்மராசா, *PhD*,**
விரிவுரையாளர்
தேசிய கல்வியியற் கல்லூரி.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றக் காப்பாளர் உரை

ஆரம்பக் கல்வி 15 ஆம் அணி முகிழ்நிலை ஆசிரிய மாணவி குணாலினி குணரத்தினம் நல்லூர் வடக்கைப்பிறப்பிடமாகக் கொண்டவர். சிறந்த ஆளுமை மிக்க ஆசிரிய மாணவியாக விளங்கும் இவர் இரண்டாண்டுகள் முழுமையான பயிற்சியைப் பெற்று வெளியேறும் நிலையில் தனது இருப்பை பதிவு செய்து செல்லும் வகையில் ஒரு சிறுகதைத் தொகுப்பொன்றை வெளியிடுவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

ஓர் ஆசிரியர் பன்முக ஆற்றலைக் கொண்டவராக இருக்க வேண்டியது அவசியமாகும். அந்த வகையில் இவரிடம் பேச்சு, கவிதை, கட்டுரை, சிறுகதை என பல ஆற்றல்கள் இருக்கின்றன. அதில் ஒரு களம் இப்பொழுது திறந்து விடப்படுகின்றது. தனது சமூகம் பற்றிய பார்வையினையும் தான் அறிந்தவை, சந்தித்தவை, மனதைப் பாதித்த விடயங்கள் இவரின் சிறுகதைகளின் கருவாக அமைந்துள்ளன.

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களிடம் பல்வேறு ஆக்கத் திறன் வெளிப்பாடு இருப்பது இயல்பே அந்த வகையில் இவரது முயற்சியும் திறன் வெளிப்பாடும் இச் சிறுகதை ஊடாக வெளிப்பட்டுள்ளது. இவரது முயற்சிகள் வெற்றி பெற வாழ்த்துகிறேன். இப்பணி தொடர இறை ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

**கி.கிருஸ்ணயோகன்(விரிவுரையாளர்)**
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் முகிழ்நிலை ஆசிரியராக இருக்கும் காலத்தில் மௌனம் கலைந்தது எனும் இலக்கியப் படைப்பு வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இதில் பதினொரு சிறுகதைகள் பொதிந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் காலத்தின் கண்ணாடிகள், ஈழமக்களின் அல்லல்களை தெள்ளென வெளிப்படுத்தியுள்ளன. இத்துடன் கல்விப் புலத்தையும் அங்கே நிலவும் சிக்கல்களையும் வெளியே எடுத்து அக் கதாபாத்திரத்திரங்கள் சந்திக்கும் பிரச்சினைகளயும் அவற்றிலிருந்து அவை வெளியில் வரவும் உதவும் பாங்கில் சில கதைகள் அமைந்து உள்ளன.

இலக்கியச் சுவை குன்றாது எளிய மொழி நடையில் யாவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் இக் கதைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந் நூல் வெளிவருவதற்கு பலரின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளது. இக் கதைகள் எழுதுவதற்கும், அதனை வெளியிடுவதற்கும் உறுதுணையாக நின்ற செல்லையா மோகநாதன் அவர்களிற்கு முதற் கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் வாழ்த்துச் செய்திகளை தெரிவித்த பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் மற்றும் உப பீடாதிபதி S.R. சத்தியேந்திரம்பிள்ளை அவர்களிற்கும் எனது மேலான நன்றிகளை தெரிவிக்கிறேன். மேலும் அறிமுக உரை வழங்கிய திருமதி. ஜெ. உதயகுமார் அவர்களிற்கும் மற்றும் அணிந்துரை வழங்கிய கலாநிதி. சி. பத்மராஜா அவர்களிற்கும் அத்துடன் மன்றக் காப்பாளர் உரையை வழங்கிய கி.கிருஷ்ணயோகன் அவர்களிற்கும் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அட்டைப்படம் வரைந்து தந்த செ.கருணாகரன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சகல வழியிலும் ஒத்துழைத்த அச்சக ஊழியர்கள் அனைவரிற்கும் எனது மேலான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக்கங்களுக்கு எப்போதும் தம் மேலான உதவிகளை வழங்கி பல்வேறு வழிகலிலும் உதவிய என் தந்தை ப.குணரத்தினம் மற்றும் என் தாயார் கு.இந்திராணி அவர்களிற்கும் என் உளப் பூர்வமான நன்றிகள்.

அன்புடன்
கு.குணாலினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | பக்கம் | |
|---|---|---|---|
| 1. | விடிவெள்ளி | 1 | 6 |
| 2. | மாறியது நெஞ்சம் | 7 | 12 |
| 3. | ஏக்கம் | 13 | 18 |
| 4. | அஸ்தமனம் அல்ல உதயம் | 19 | 26 |
| 5. | கடமை | 27 | 34 |
| 6. | கேண்மைத் தீ | 35 | 41 |
| 7. | மெழுகுவர்த்தி | 42 | 48 |
| 8. | ஆசை | 49 | 52 |
| 9. | கூண்டுக் கிளி | 53 | 57 |
| 10. | மௌனம் கலைந்தது | 58 | 62 |
| 11. | சுயம்வரம் | 63 | 70 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடி வெள்ளி

# 1



காலைக் கதிரவன் ஓலைக் குடிசையின் துவாரத்தின் ஊடாக ரவியின் முகத்தில் பளிச்சென்று கதிர்களை வீசியெறிய ரவி திடுக்கிட்டு எழுந்தான். அந்த வேளை பட்சிகள் ரீங்காரமிடும் சத்தத்துடன் கடலலையின் அகோரமான கொதிப்பு பலத்த சத்தமாக கேட்டது. ரவி அவசரமாக நேரத்தைப் பார்த்தான் நேரம் ஆறு மணியை அடைந்து கொண்டிருந்தது. பதற்றத்துடன் எழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தான் தாயும், தங்கையும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். ரவி தன் தொழிலிற்கு தேவையானவற்றை எடுத்துக் கொண்டு வாசலையடையும் வேளை தாய் பார்வதி ஓடி வந்து "தம்பி தேனீர் வைக்க தேயிலை இல்லை இந்த தண்ணீரை அருந்தி விட்டுச் செல்" என்றாள். ரவியோ "அம்மா! ஐந்து மணிக்கு கடலிற்கு சென்றிருக்க வேண்டும் இன்று இவ்வளவு நேரம் சென்று விட்டது சம்மாட்டி இன்று கடினமாக திட்டப்போகிறார்." என்று அவசரமாக ஓடினான்.

பார்வதி கவலை தோய்ந்த முகத்துடன் ரவியை பார்த்தவாறு வாசலிலே நின்றாள். பின்னால் வந்த தங்கை சீதா தாயைப் பார்த்து, "அம்மா ஏன் அண்ணா இவ்வளவு கஸ்டப்படுகிறார்" என்று கேட்டாள்.

"உங்க அப்பா இருக்கிற வரைக்கும் எங்களுக்கும் ஒரு குறையுமிருக்கவில்லை. உனக்கு இரண்டு வயசிருக்கேக்க உங்கப்பா இறந்த பிறகு என்னாலும் எந்த வேலைக்கும் போக முடியவில்லை. அதுக்குப் பிறகு உங்கண்ணா கடல் தொழில் செய்தும், பாடசாலைக்குப் போய் படித்தும் இவ்வளவு கஸ்டப்படுகிறான். இதுக்கெல்லாம் எப்பதான் விடிவுகாலம் வருமோ" என்று புலம்பினான்.

ரவி கடலை அண்டியதும் சம்மாட்டி கோபமாகக் கத்திக் கொண்டிருந்தார். ரவியைப் பார்த்ததும் அவரின் முகமே மாறியது. "நான் இன்று மட்டும் தானே நேரம் தவறி வந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை மன்னியுங்கள்" என இரந்து கூறினான்.

"கூலி வேலைக்கு வாற உனக்கு இவ்வளவு கதை கதைக்கத் தெரியுதோ, இந்த இலட்சணத்திலை நீ வேலை முடியப் படிக்க வேற போறியா, நீ எல்லாம் படிச்சு என்ன கலெக்டர் ஆகப் போறியாக்கும்." என்று கத்ததினார் சம்மாட்டி ரவிக்கு கோபம் வந்தது. அதை மௌனமாக அடக்கிக் கொண்டு முதலாளிக்கு சொன்னான் "நான் கலெக்டர் ஆவேன் ஐயா" என்று முதலாளி கோபத்துடன் "இன்றைக்கு உன்னை எட்டு மணிக்கு விட்டால் தானே நீ பாடசாலை செல்வதற்கு" என்று கடினமாக கூறி விட்டு பலத்த வேலைகளை எல்லாம் ரவிக்கு கொடுத்தான்.

ரவியின் மனமோ, உடலோ இன்னும் உரப்பு அடையாததால் அவன் உடல் வேலைகளைச் செய்ய முடியாது தவித்தது. ஆனாலும் குடும்ப வறுமை அவனின் முகத்தில் காட்சியாக ஓடியது. தானும் வேலை செய்யாது விட்டால் தன் அம்மாவும் தங்கையும் என்னாவார்கள் என சிந்தித்து அந்த நிலமையைக் கூட சுகமாக்கினான். எட்டு மணியை தாண்டியது முதலாளி வேண்டுமென்றே வேலைகளைக் கொடுத்தார். ஓரளவு நேரத்தில் ரவி அந்த வேலைகளை முடித்து விட்டு வீட்டிற்கு ஓடிவந்தான்.

பார்வதி வாசலில் நின்று கொண்டிருந்தாள். ரவியைக் கண்டதும் பழஞ்சோறும் ஒரு பொட்டலம் கட்டி கொடுத்தாள். ரவி தன்னிடமிருந்த பழைய கொப்பிகளை எடுத்துக் கொண்டு பாடசாலை நோக்கி வெகு விரைவாக சென்றான். பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலில் அதிபர் நின்று நேரம் தவறி வந்தவர்களிற்கு அடித்துக் கொண்டிருந்தார். ரவியைக் கண்டதும் அதிபர் "இது என்ன கே-ாலம் உன் உடலெல்லாம் மீன் வாடை, உடைகளெல்லாம் அழுக்கு, பாடசாலைக்கு வரும் நேரமோ இது" என்று கண்டபடி உடலெல்லாம் அடித்தார். அடித்த வேளை தவறுதலாக அவன் கையில் பட்ட அடியினால் அவனது பழஞ்சோற்றுப் பொட்டலம் கீழே சிந்தியது. அதில் பழஞ்சோறு மட்டுமே தென்பட்டது. ஒரு கறி கூட இருக்கவில்லை அதிபர் அதிர்ந்தார். இவ்வளவு அடியால் கண்ணில் இருந்து ஒரு துளி கண்ணீர் கூட வரவில்லை. கீழே சிந்திய பழஞ்சோற்றைப் பார்த்ததும் அவனது கண்ணிலிருந்து தாரை தாரையாக நீர் சிந்தியது. அந்த ஒவ்வொரு சோற்றிலும் அவனது உழைப்பும் வறுமையும் தென்பட்டன. அம்மா தனக்குக் கூட வைக்காமல் எனக்கு தந்த உணவு இப்படி வீணாகி விட்டதை எண்ணி அந்த சோற்றைப் பார்த்துப் பார்த்து அழுதான்.

அதிபர் அவனது நிலையை நினைத்து பரிதாபமடைந்து அவனை வகுப்பிற்குச் செல்லுமாறு அனுப்பி விட்டார். பின்னர் ரவியின் வகுப்பாசிரியரை அழைத்து ரவியின் நிலையை விசாரித்தார். வகுப்பாசிரியர் கூறினார். "குடும்பம் சரியான வறுமையானது, தந்தை இல்லை இவனே உழைத்து குடும்பத்தை காத்து கஸ்டத்தின் மத்தியிலும் படிக்கிறான் அத்துடன் வகுப்பில் ரவியே முதலாம் பிள்ளையாய் வருகிறவன்" என்றார். அதிபரிற்கு அவன் மேல் பரிதாப உணர்வு ஏற்பட்டது. மதிய இடைவேளையின் போது ரவியை அழைத்த அதிபர் தன் உணவையே ரவிக்கு கொடுத்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது பெருந்தன்மை அதை ஏற்க மறுத்தது. அதிபர் ஒருவாறு சமாதானப்படுத்தி அந்த உணவை ரவிக்கு கொடுத்து விட்டார். ரவிக்கு ஒரு பரிசுப் பொட்டலத்தையும் கொடுத்து "நீ நல்லாய் படிக்க வேணும்" என்றார். ரவி ஆவலாக அந்தப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தான். உள்ளே கொப்பிகள், பென்சில்கள், பேனைகள் எனப் பல கல்விக்குத் தேவையானவை காணப்பட்டன. ரவியின் கண்களில் கண்ணீர் வந்தது. அதிபரிற்கு நன்றி செலுத்தினான். அதிபர் சொன்னார் "நீ நல்லாய் படித்து பெரிய பதவியில் இருக்க வேணும் உனக்கு எல்லா உதவியும் நான் செய்வேன்" என்றவர் மாதா மாதம் சிறு தொகைப் பணத்தையும் கொடுத்தார்.

காலம் உருண்டது ரவி A/L பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழகம் சென்றான். தன் அதிபரிடம் சென்று காலில் வீழ்ந்து நன்றி செலுத்தினான்.

"உன் முயற்சியினாலேயே நீ வெற்றி கண்டுள்ளாய்" என்று வாழ்த்தினார் அதிபர். அதன் பிறகும் அதிபர் தான் செய்த பண உதவியை நிறுத்தவில்லை. ரவி கஸ்டத்தினை பொருட்படுத்தாது படித்து பல்கலைக்கழகத்தை முடித்தான். அதன் பிறகு S.L.A.S பரீட்சையை எழுதி அதில் உயர் புள்ளி பெற்று இந்தியாவில் கலெக்டர் எனப் பேசப்படும் நிர்வாகசேவை அதிகாரி ஆகிவிட்டான்.

ரவி உதவி பிரதேச செயலாளராக அவனது பிரதேசத்திற்கே நியமிக்கப்பட்டான். பார்வதி தங்களுக்கு விடிவு காலம் வந்து விட்டதாக எண்ணி கடவுளுக்கு நன்றி செலுத்தினாள். A.D.S ரவி தன் அதிபரிடம் ஓடிச் சென்று காலில் விழுந்தான். "நீ என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்படி படித்து உயர்ந்து விட்டாய்." என்று வாழ்த்தி "உன் பணிவும் உழைப்பும் முயற்சியுமே உன்னை உயர்த்தியது" என்று பாராட்டினார்.

சம்மாட்டி ரவியின் உயர்வைக் கேள்விப்பட்டு எண்ணி பெருமிதப்பட்டார். "நான் தவறாக எண்ணி விட்டேன், வறுமையிலும் உன் உழைப்பாலும், முயற்சியாலும் கற்று உயர்ந்து விட்டாய்" என மனதார வாழ்த்தினார். சம்மாட்டி முதலாளி ரவியின் தங்கைக்கு தன் மகளை திருமணம் செய்து கொடுத்தார். பின் ரவி தனியாக ஆதரவற்றிருந்த அதிபரையும் தன் வீட்டிலே கொண்டு வந்து வைத்திருந்தான். அப்போது அதிபர் "என்னை என் பிள்ளை கூட பார்க்காத நிலையில் நீ இவ்வாறு மதிக்கிறாய். வறுமையால் உயர்ந்த நீ மேலும் உயர என் வாழ்த்துக்கள்" என மனதார வாழ்த்தினார்.

கிழக்கு வானில் அதிகாலை விடிவெள்ளி பிரகாசிக்க சூரியனின் பொற் கிரணங்கள் எங்கும் பரந்தன.

**முற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறியது நெஞ்சம் 2

அன்றும் வழமை போல் அதே மண்வெட்டி, பூத்துக் குலுங்கும் தோட்டம், செம்பாட்டு மண்ணை பற்றிப் பிடித்த கால்கள் கந்தனிற்கு என்னவோ அந்த மண்வெட்டி தன் உடன்பிறவா சகோதரனாகியது. தன் மண் குடிசையிலிருந்து சில மைல்கள் தொலைவில் உள்ள பங்களா தோட்டத்தில் தான் கந்தன் தன் குடும்ப வயிற்றுப் பிழைப்புக்காக பாடுபடுகிறான். கந்தனின் மனைவிதான் வள்ளி. அவள் அயலட்டையில் உள்ள வீடுகளில் பாத்திரம் கழுவிக் கொடுத்து வரும் ஒரு பகுதிப் பணத்தில் தன் ஒரு வயது நிறையாக் குழந்தைக்கு பால்மா வாங்கி அந்த சிசுவின் பசியை ஆற்றுகிறாள். அவளின் உழைப்பில்தான் குடும்பம் நடக்கிறது என்று கூட நினைக்காமல் கந்தன் பல மாதமாக சம்பளம் வாங்காது வேலையைச் செய்கிறான்.

மணிக்கற்களும், ஆடம்பரமான லைற்றுகளும் போடப்பட்ட அந்த பங்களாவில் எஜமானரும், எஜமானியும் ஆடம்பர வாழ்க்கையை வாழ்கிறார்கள். அவர்கள் தங்கள் பணம் வேறு எங்கும் சிதறக் கூடாது என நினைப்பவர்கள். அந்தப் பெரிய மனிதர்கள் தங்களுக்கு கீழ் வேலை செய்யும் ஏழைகளை அடிமைகளாக எண்ணி மாடு மாதிரி வேலை வாங்குகிறார்கள். மாடு மாதிரி வேலை வாங்கிய பின்னும் இரவு ஏழு மணியை கடந்துதான் அவர்கள் வீடு செல்ல வேண்டும் என்பது அவர்களின் கட்டளை. பாவம் கந்தன் காலை ஆறு மணிக்கு வீட்டிலிருந்து வெளிக்கிட்டால் இரவு எட்டு மணியளவில் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு சென்று சேருவான். தான் பெற்ற குழந்தையை கொஞ்சி மகிழ்ந்த நாட்களோ குறைவு, குழந்தை எழும்ப முன் சென்று குழந்தை தூங்கிய பின்பே வீடு வருகிறான்.

ஒரு நாள் வள்ளி ஓலைக் குடிசையின் வாசலிலே இரவு எட்டு மணியளவில் தனி மரமாக காத்துக் கொண்டு இருந்தாள். நேரம் செல்லச் செல்ல அவள் மனதில் ஏதோ ஒருவித பயம் பற்றிக் கொண்டது. நேரம் பத்து மணியைத் தாண்டியது. கந்தன் இன்னும் வீடு வரவில்லை. சந்திக் கடையிலிருந்து பாலன் ஓடி வந்தான்.

"அக்கா கந்தனண்ணையை யாரோ அடிச்சுப்போட்டு றோட்டில போட்டுருக்கிறார்கள். அவரால் நடக்க முடியாமல் றோட்டிலேயே கிடக்கிறார்." என்றான். வள்ளியின் மனம் பதைபதைத்தது. இதயமே நின்று விட்டது போலிருந்தது. இருந்தும் குழந்தை நினைவுக்கு வர பாதித் தூக்கத்தில் இருந்த குழந்தையை தூக்கி பக்கத்து குடிசை லீலா அக்காவிடம் ஒப்படைத்து விட்டு கடைத் தெருவிற்கு ஓடிச் சென்றாள்.

அவள் தன் கண்களால் கந்தனை பார்க்க முடியாமல் துடித்தாள். கந்தன் மயக்கத்தில் அசைவற்றுக் கிடந்தான். அருகில் நின்றவர்கள் கதைத்தனர் "இவன் கால் உடைந்திருக்க வேண்டும் இவனால் இனி நடக்க முடியாது." என்று வள்ளியின் மனம் உடைந்து கதறி அழுதாள். "எந்தப் படுபாவி இந்த அப்பாவி மனுசனை அடிச்சதோ" என்று வயிறு எரிந்து கத்தினாள். பாலன் ஒரு ஆட்டோவுடன் ஓடி வர கந்தனை அரசாங்க மருத்துவ மனையில் சேர்த்தனர். அவசர மருத்துவப் பகுதியில் கந்தன் சேர்க்கப்பட்டான். வள்ளி ஆஸ்பத்திரி வாசலிலே அழுத விழிகளுடன் இரவு முழுவதும் விழித்திருந்த வேளை உள்ளே இருந்த வைத்தியர் வெளியே வந்தார். வள்ளியின் நிலை அவரிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தது போல் வள்ளியை பார்த்து "உங்களுடைய கணவன் கண்விழித்துள்ளார் பார்க்கலாம்" என்றார். வள்ளி உள்ளே ஓடிச் சென்றாள். கந்தன் கண்களில் கண்ணீர் வடிந்தது. அந்த சில மணித்தியாலங்களில் நடந்து போன சம்பவம் மனதை வாட்டியது. மாடு போல் உழைத்ததிற்கு எனக்கு கிடைத்த சன்மானம் இதுதானா என வருந்தினான்.

இதுவரை வள்ளி அழைத்தது கூட இவன் காதில் கேட்கவில்லை. இறுதி அழைப்பில் திடுக்கிட்டு நிகழ்கால நிலைக்கு உருமாறினான். வள்ளி புலம்பினாள். "யார் உன்னை இப்படி கண்டபடி அடித்தது" என்று அழுதாள். கந்தன் "இது யாரோ என்று என்னை மாறி அடித்திட்டார்கள்" என்று மௌனம் சாதித்தான். பாவம் அவள் ஒரு பேதைப் பெண், எதுவும் அறியாதவள். கந்தனின் சொல்லை நம்பினாள். கண்களில் வடியும் நீர் எல்லையின்றி குமுறிச் செல்வதைக் கூட பொருட்படுத்தாது அவன் காலைப் பார்த்தபடி அழுது கொண்டிருந்தாள். இத் தருணம் தாதிப் பெண் ஒருவர் வந்து வள்ளியை வெளியில் அனுப்பி விட்டார். வள்ளிக்கு தன் குழந்தை நினைவுக்கு வர வீட்டிற்கு சென்று விட்டாள்.

கந்தனுக்கு அந்த சம்பவம் மீண்டும் மனதை உலுக்கியது. அன்று காலை வள்ளி நச்சரித்தாள். "சம்பளம் இல்லாமல் நீ இரவு பகலாக உழைக்கிறது என்ர உழைப்பில் சாப்பிடத்தானோ" என்று திட்டித் தீர்த்தாள். கந்தன் இன்று சம்பளத்துடன் தான் வீடு வர வேண்டும் என்ற வைராக்கியத்துடன் சென்றான். வழமை போல் தோட்டத்தில் உள்ள காய்கறிகள் எல்லாவற்றையும் பிடுங்கி சந்தையில் விற்று ரொக்கமாக 5000 ரூபா பணத்தை எஜமானியிடம் ஒப்படைத்தான். வீடு செல்லும் நேரம் வரும் வரை காத்திருந்தான். நேரம் ஆறு மணியைத் தாண்டி மாலை மங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. பங்களா முழுவதும் வெளிச்சத்தில் மூழ்கியது. கந்தன் மெதுவாக பங்களாவை அண்டினான். உள்ளே எஜமானி "நான் பத்தாயிரம் ரூபாவிற்கு இந்தச் சங்கிலியை வாங்கினேன் அழகாய் உள்ளதா" என்று எஜமானிடம் கேட்டுக் கொண்டிருந்தான். கந்தன் மெதுவாக இருமினான். சத்தம் கேட்டு அந்தப் பெரிய மனிதர்கள் திரும்பிப் பார்த்தார்கள். எஜமான் கையிலிருந்த பியர் கிளாசை உடனே கீழே மறைத்து வைத்து விட்டு, "உன்னை யார் உள்ளே வரச் சொன்னது"என அதட்டினார்.

கந்தன் "ஐயா! வீட்டிலே ரொம்ப நாளா பட்டினி நீங்க எனக்குத் தரவேண்டிய சம்பள பாக்கிப்பணம் 6000 ரூபாவை தயவுடன் தாருங்கள் என்றான். எஜமான் உடனே "உனக்கு மாதம் மாதம் சம்பளமும் ஒரு வேளை சாப்பாடும் தருகிறோம். இப்ப நீ தரவில்லை என்கிறாய் உடனடியாக வெளியே போ" என அதட்டினான். நீங்கள் தராவிடின் நான் பொலிசாரிடம் முறையிட்டுக் பெற்றுக் கொள்கிறேன்" என்றவாறு வெளியே சென்று விட்டான்.

"இவன் உண்மையில் பொலிசிற்கு போனால் பெரிய பிரச்சனை ஆகிவிடும்" என்றாள் எஜமானி "அதற்கு நான் ஒரு தந்திரோபாயம் வைத்துள்ளேன். அவனிற்கு இரண்டு அடி கொடுத்தால் காலம் பூரா எங்களுக்கு மாடா உழைப்பான்." இதைக் கேட்டுக் கொண்டிருந்த வேலைக்காரி தங்கம்மா உடனே ஓடிப்போய் கந்தனிடம் சொல்லிவிட்டாள். கந்தன் இவர்கள் பணக்காரர்கள் அவர்களோடு எங்களால் போட்டியிட முடியாது" என பெருமூச்சு விட்டபடி தன் சைக்கிளில் ஏறினான். கையில் ஏதோ குத்தியது போலிருந்தது கந்தன் சுய நினைவிற்கு வந்தான். வைத்தியர் ஊசி போட்டுக் கொண்டிருந்தார். கந்தன் பெருமூச்சு விட்டபடி சற்று அசைந்துபடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி என்னதான் செய்வாளோ, இவ்வளவு நாளாய் பாத்திரம் கழுவிய வீட்டுக்காரர் வெளிநாடு சென்று விட்டார்கள். இப்போது எங்கே வேலை செய்து குழந்தையையும், கணவரையும் பார்ப்பது என்று வாடி நின்றாள். லீலா அக்கா சொன்னாள் "கந்தன் வேலை செய்த பங்களாவில் போய் உன் நிலையை சொல்லு அவர்கள் பெரிய பணக்காரர் உனக்கு பணம் தந்து உதவுவார்கள்." வள்ளி இதுக்கு ஒப்புக் கொண்டு உள்ளே குழந்தை தூங்குகிறது அழுதால் பார்க்குமாறு கூறிவிட்டு பங்களாவிற்கு சென்றாள். லீலா தன் குடிசைக்குள் சென்று சமைக்கத் தொடங்கினாள்.

வள்ளியின் குழந்தை பாவம் கந்தன் ஆஸ்பத்திரி போன நாளிலிருந்து பட்டினியாகவே கிடக்கிறது. குழந்தை கண் விழித்து பசியின் அகோரத்தில் வெறும் நிலத்தில் கிடந்து புரண்டு புரண்டு அழுது தூங்கி விட்டது.

வள்ளி பங்களா வாசலில் நின்று சுற்றும் முற்றும் பார்த்தாள் . இவ்வளவு பெரிய மாளிகையிலா என் கணவன் வேலை செய்தார் என வியந்தாள். மெது மெதுவாக உள்ளே சென்றாள். எதுவித சத்தமுமின்றி நிசப்பதமாகவே மாளிகை தோன்றியது. அருகாமையில் கட்டியிருந்த பெரிய நாய் ஒன்று வள்ளியைப் பாரத்துக் குரைத்தது. எஜமானி மெதுவாக எட்டிப் பார்த்தாள், அது கந்தனின் மனைவியாகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் எஜமானியின் மனதில் பயத்தினை ஏற்படுத்தியது. பாவம் ஏழைகளிற்கு செய்த கொடுமையினாலே இன்று இப்படி நடந்து விட்டது. இதனால்தான் எஜமானை பொலிஸ் பிடித்து விட்டது. தங்கம்மா நம்மை காட்டிக் கொடுத்தது கூட நாம் அவளை மாடு மாதிரி வேலை வாங்கியதாலும் இருக்கலாம். என மனம் வருந்தினாள். ஒரு வேளை நாம் இந்த ஏழைகளின் நிலையிலிருந்தால் நம் நிலை என்னவாகும் எனப் பதறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி உள்ளே வந்து "அம்மா" என பரிதாபக் குரலில் அழைத்தாள். எஜமானிக்கு அவள் முன்னே ர வெட்கித் தலை குனிந்தாள். மெதுவாக வெளியே வந்தாள். வள்ளிக்கு அவளைக் கண்டதும் தாரை தாரையாக கண்களில் நீர் சொரிந்தது. "அம்மா என் கணவரைக் காப்பாற்றுங்கள்" எனக் கண்கலங்கி கதறி காலைப் பிடித்தாள். எஜமானியின் மனதில் இவளுக்கு எதுவும் தெரியாது என்ற உண்மை வெளிவந்தது. உடனே "கவலைப்படாதே" என்று கந்தனின் சம்பளம் 6000 ரூபாவை வள்ளியிடம் கொடுத்தாள். ஏழைப் பெண் வள்ளிக்கு அந்த ரூபா பல லட்சமாக தென்பட்டது. கண்ணீரினால் நன்றி செலுத்தி வெளியேறி ஆஸ்பத்திரியை அடைந்தாள். அங்கே எஜமான் கந்தனிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டிருப்பதை வள்ளி பார்த்தபடி உள்ளே சென்றாள். கந்தன் கண்ணீரில் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டான். வள்ளி "எஜமானி அம்மா 6000 ரூபா தந்தவா ரொம்ப நன்றி ஐயா!" என கண்கலங்கினாள். எஜமான் கந்தனிடம் ஏழைகளும் மனிதர்கள்தான் மாடுகளல்ல அவர்களிற்கும் உணர்வுகள் ஆசைகள் உள்ளன. என்பதை முழுமையாக அறிந்து கொண்டேன். உனக்கு உடம்பு குணமடைந்ததன் பின் மாடாக அல்ல மனிதனாக என்னைப் போல சக மனிதர்களான எம் வீட்டில் வேலை செய்ய வேண்டும் எனக் கும்பிட்டார்.

கந்தனிற்கு உடல் நலம் குணமடைந்து சீரான முறையில் சம்பளம் பெற்று தன் குடிசையிலே அளவான மற்றும் நிறைவான வாழ்க்கை எனும் படகில் பயணித்தான்.

*ஏழைகளும் மனிதர்கள் தான் அவர்களிற்கும் உணர்வுகள் உண்டு.*

**முற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கம் 3



மழை இன்னும் ஓயவில்லை. தாரை தாரையாக பொழிந்து கொண்டே இருக்கிறது. பாடசாலை வாசலிலே ஓர் பஸ் வந்து நிறுத்தப்பட்டது. உள்ளே இருந்து ஒரு கறுப்புக் குடையை விரித்தபடி மாலதி ரீச்சர் கீழே இறங்கினார். மெல்லிய உடலமைப்பைக் கொண்ட, ஓரளவு உயரமான அனைவரின் மனதையும் கவரக்கூடிய தோற்றம் கொண்ட இளநங்கை மாலதி ரீச்சர். மெதுவாகப் பாடசாலை வளாகத்தினுள் காலடி வைத்தார். அன்றுதான் மாலதி ரீச்சர் பாடசாலைக்கு கட்டுறு பயிற்சிக்கு வரும் முதல் நாள். மழைக்குள் நனைய காத்திருந்த சேலையை உயர்த்திய படி உள்ளே நுழைந்து அதிபரை சந்தித்த மாலதி ரீச்சர் 2A வகுப்புக்குள் தன் முதல் நாள் வகுப்பை எடுப்பதற்கு நுழைந்தார்.

மழலைச் செல்வங்கள் "குட் மார்னிங் ரீச்சர், ஆய்போவன் குருதுமி, வணக்கம் ஆசிரியர்" என்று மூன்று மொழியிலும் வரவேற்றமை மாலதி ரீச்சர் மனதில் வியப்பை ஏற்படுத்தியது. உள்ளே வகுப்பு ஆசிரியர் பிள்ளைகளுக்கு "உங்களுக்குப் புது ரீச்சர் வந்திருக்கிறார், பத்து நாட்களிற்கு உங்களுக்கு கற்பிப்பார். நீங்கள் ரீச்சரிற்கு ஒத்துழைத்து நல்லா படிக்க வேண்டும். ரீச்சரைப் பார்க்க பெரிய மேடம், சேர் எல்லோரும் வருவினம் நீங்கள் நன்றாக துலங்க வேண்டும்." என்ற போது குழந்தைகள் ஆரவாரமாய் "ஓம் ரீச்சர்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூச்சலிட்டனர். வகுப்பாசிரியர் சுகந்தினி ரீச்சர் பிள்ளைகளைப் பார்த்து "நீங்கள் புது ரீச்சரின்ர காலில் வீழ்ந்து ஆசிர்வாதம் பெறுங்கள்" எனக் கூறினார். மாணவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக மாலதி ரீச்சரின் காலில் வீழ்ந்து வணங்கியமை மாலதி ரீச்சரிற்கு கூச்சத்தை ஏற்படுத்தியது அவரின் முதல் அனுபவம் முதலில் ஆசிரியராக பாடசாலை சென்று, மாணவர் தன் காலில் வீழ்ந்து வணங்கியமை வாழ்வின் முதல் அனுபவம். அன்றைய நாள் முழு-வதும் மகிழ்ச்சியாயிருந்தது. இதைத் தொடர்ந்து மாலதி ரீச்சர் பிள்ளைகளிடம் தன்னை அறிமுகப்படுத்தினார். பின் பிள்ளைகள் தங்கள் பெயர்களை தந்தையின் பெயருடன் சேர்த்து எழுந்து கம்பீரமாக சொன்னார்கள். அந்தப் பிள்ளைகளைப் பார்த்த மாலதி ரீச்சரின் மனதில் "எவ்வளவு கெட்டிக்காரக் குழந்தைகள்" என எண்ணம் எழுந்தது.

முதல் நாள் வகுப்பை எடுக்க ஆரம்பித்த மாலதி ரீச்சர் வகுப்பில் உள்ள 40 மாணவர்களில் ஒரு மாணவன் தனராஸ் மட்டும் ஒதுங்கி யாருடனும் பேசாமல் தன் பாட்டிற்கு இருந்து சில சமயம் பிற மாணவர்களிற்கு அடிப்பதும், நுள்ளுவதுமாக இருந்ததை அவதானித்தார். வகுப்பில் எல்லாப் பிள்ளையும் கொப்பி காட்டிய பின் தனராஸ் மட்டும் கொப்பி காட்டவில்லை என்ற போது அவன் விழி பிதுங்கி பயத்தினால் அங்குமிங்கும் பார்த்தான். மாலதி ரீச்சரிற்கு இது தெரிந்தும் தெரியாதது போலிருக்க சக மாணவர்கள் உரத்த குரலில் "தனராஸ் காட்டவில்லை ரீச்சர்" என்று காட்டிக் கொடுத்து விட்டனர். மாலதி ரீச்சர் மற்றைய பக்கம் திரும்பி "கதைக்கக் கூடாது" என்று சொன்ன சமயம் "ஐயோ!" என்று ஒரு சத்தம், சுகந்தி ரீச்சர் தனராஸ் முதுகில் மெல்லிய நீண்ட தடியினால் "பளார்" என்று மூன்று அடி, அந்த பிஞ்சு உள்ளம் வலியில் துடித்தது. இன்னும் கொப்பி காட்டாமல் இருக்கிறாய்" என்று சுகந்தி ரீச்சர் திட்டித் தீர்த்தமை மாலதி ரீச்சரின் உள்ளத்தில் பதிந்தது. அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் தனராஸ் பற்றிய உணர்வு மாலதி ரீச்சரை பற்றிப் பிடித்தது.

தனராஸ் பற்றி சுகந்தி ரீச்சரிடம் கேட்கலாம் என எண்ணிய போது அதை விட தாமே தனராஸை அணுகி அவனுக்குள் உள்ள பிரச்சினையை வெளிக் கொண்டு வர எண்ணினார். அடுத்த நாள் அதே உபசரிப்புடன் வகுப்பறைக்குள் நுழைந்த மாலதி ரீச்சரின் கண்கள் தனராஸ் இருக்கும் இடத்தை தேடியது. அழுக்கான உடையுடன் தலைமுடி வளர்ந்து ஒரு மூலையில் ஒதுங்கியிருந்தான். இன்று சுகந்தினி ரீச்சர் பாடசாலைக்கு லீவு. 10.30 மணி அளவில் மாலதி ரீச்சரை பார்வையிட இந்திரகுமார் லெக்சரர் வந்துவிட்டார். மாலதி ரீச்சர் தமிழ் பாடத்தை எடுத்துக் கொண்டிருந்த வேளை தனராஸ் அருகில் இருந்த மாணவனுடன் முரண்பட்டு அவனின் கன்னத்தில் "பளார்" என்ற சத்தத்துடன் அறைந்து விட்டான். வகுப்பே நிசப்பதமாக சண்டையை பார்வையிட இந்திரகுமார் சேரிற்கு நெஞ்சு பதைபதைத்தது. மாலதி ரீச்சரிற்கு கோபம் தலைக்கேறியது ,ஆனாலும் அதைக் கட்டுப்படுத்தி சண்டையை சமாதானமாக்கி வகுப்பை முடித்த வேளை இந்திரகுமார் சேர் லெசன் கொப்பியில் "வகுப்பறை முகாமைத்துவம் பேணப்படவில்லை என எழுதி விட்டார். மாலதி ரீச்சரிற்கு கோபம் குறைந்து தனராஸ் ஏன் இப்படி இருக்கிறான் என அறிய மனம் ஆவலாகியது.

பாடசாலை விடும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. மாலதி ரீச்சரின் பாடம் எல்லாம் முடிந்து மாணவர்கள் மைதானத்திற்கு விளையாடச் சென்ற சமயம் தனராஸ் தனிமையில் அமர்ந்திருந்தான். அதை அவதானித்த மாலதி ரீச்சர் தனராஸ் அருகில் சென்று அமர்ந்தார். தெரியாதது போல் உன் பெயர் என்ன எனக் கேட்ட போது மெதுவாக வெட்கித்து "தனராஸ்" என்று கூறினான். உங்க அப்பா பெயர் என்ன? அப்பா என்ன செய்கிறார்? என்ற போது மௌனம் சாதித்தான். அருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற விமல் என்ற பையன் "அவனிற்கு அப்பா , அம்மா பற்றி கதைச்சால் பிடிக்காது ரீச்சர். தனராஸ் இப்ப அன்ரி, மாமாவோட இருக்கிறான்" என்று கூறிவிட்டு விழுந்த பந்தை எடுத்துக் கொண்டு ஓடினான். மாலதி ரீச்சரிற்கு இவனின் உள்ளார்ந்த பிரச்சனையை ஆராய மனம் ஆவலாக இருந்தது. தனராஸிடம் மாலதி ரீச்சர் மெதுவாக "உனக்கு ரீச்சரைப் பிடிச்சிருக்கா" என்று கேட்ட போது "ஓம் ரீச்சர்" என்று சிறு புன்னைகையுடன் சொன்னான். மாலதி ரீச்சர், "நாளைக்கு நீ வரேக்கை ரீச்சருக்கு பிடிச்ச மாதிரி தலை முடி வெட்டி புதுச்சட்டை போட்டு அழகாக வரவேண்டும்" என்று கூறி தனராஸ் முதுகில் கை வைக்க பாடசாலை முடிவடைந்த மணி ஒலித்தது. எல்லோரும் தம் தாய், தகப்பன் என சொந்தங்களுடன் வீட்டிற்கு சென்று கொண்டு இருந்த வேளை தனராஸ் மட்டும் தனிமையில் வீதி ஓரத்தில் நடந்து சென்று கொண்டிருந்தான்.

ஏனோ மாலதி ரீச்சரின் மனதில் தனராஸ் பற்றி ஒரு பரிதாப உணர்வு ஏற்பட்டது. அடுத்த நாள் பாடசாலை சென்ற போது புது முகமாக அழகிய உடைகள் அணிந்த படி தனராஸ் ஓடி வந்து "ரீச்சர் நீங்கள் நேற்றுத் தந்த வீட்டு வேலை எல்லாம் செய்து விட்டேன் பாருங்கோ" என்று மகிழ்வுடன் கூறினான். சுகந்தினி ரீச்சர் இதை பெரிதும் பொருட்படுத்தாது "என்ன இண்டைக்கு புது உடுப்போட வந்திட்டார். மாப்பிள்ளை" என நக்கலாக கூறிய போது பூத்துக் குலுங்கிய அந்த முகம் உடனே வாடியது. மாலதி ரீச்சர் கொப்பியை வாங்கி சிவப்பு பேனையால் திருத்திய போது எழுத்துப் பிழைகள் காணப்பட்ட போதிலும் தனராஸ் வீட்டு வேலையை சரியாக செய்திருந்தான். மாலதி ரீச்சர் முதன் முதலாக வெட்டுக் கொத்து மட்டும் விழுந்து கொப்பிக்கு V.GOOD என்ற பரிசை வழங்கினார். தனராஸ் மனதில் மகிழ்ச்சி பொங்க தன் குழுவில் உள்ள எல்லோரிற்கும் காட்டி பெருமிதப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினொரு மணி மதிய இடைவேளையில் மாலதி ரீச்சர் தனராஸை அழைத்து "உன் அம்மா, அப்பா எங்கே?" என விசாரித்த போது குறுக்கிட்ட தனராஸ் "அவை எனக்கு அம்மா, அப்பா இல்லை. அன்ரியும் மாமாவும் தான் அம்மா, அப்பா" என்று கூறினான். மாலதி ரீச்சருக்கு வியப்பாக இருந்தது. தனராஸ் "நான் சின்னவனாக இருந்த போது எங்க அம்மாவையும், என்னையும் விட்டுட்டு அப்பா வேற கல்யாணம் பண்ணிட்டுப் போயிட்டார். காலப் போக்கில் அம்மாவும் என்னைத் தனியாக விட்டு விட்டு யாரோ ஒரு மாமாவை திருமணம் செய்து கொண்டு போய்விட்டா. நான் தனி மரமாக யாருமற்ற அநாதையாக ஆனேன். அப்போது தான் அந்த அன்ரியும், மாமாவும் என்னைக் கூட்டிக் கொண்டு போய் வைத்திருந்தவை. அப்போது அவைக்கு குழந்தை இல்லை என்னையே தம் குழந்தை போல் அன்பாய், பிரியமாய் வளர்த்து வந்தார்கள். இப்போது அவர்களிற்கு குழந்தை பிறந்து விட்டது. பிறகு என் மேல பாசம் குறைஞ்சு போச்சு. இப்ப என்னை செய்ய முடியாத வேலையையும் செய்யச் சொல்லினம். இருந்தும் அவை என்னில அன்பாய் இருக்கினம். சாப்பாடு எல்லாம் தந்து பாடசாலைக்கும் படிக்க விடுகிறார்கள்" என்று கூறி முடித்ததும். மாலதி ரீச்சரின் கண்களில் கண்ணீர் துளி ஒன்று சிதறியது. தனராஸைக் கட்டியணைத்து தலையை வருடினாள்.

அந்தப் பிஞ்சு உள்ளத்தில் இவ்வளவு வெறுப்புக்கள், சோகங்கள் அவன் இதயத்தைக் கீறியுள்ளன. இதை உணராது தனராஸைத் திட்டும் சுகந்தி ரீச்சர் மீது வெறுப்பும் ஏற்பட்டது. அடுத்த தடவை மாலதி ரீச்சரை பார்வையிட பவித்திரா மேடம் வந்திருந்த போது முதலில் கொப்பி காட்டியது தனராஸ் என்பதுடன் எல்லாக் கேள்விகளிற்கும் சரியான பதிலை அளித்ததும் அவனே. ரீச்சரிற்கு ஒன்பதாவது நாள் வந்தது. "நாளையோட ரீச்சர் வரமாட்டன்" என்று சொன்ன போது முதலில் வருந்தியது தனராஸ். "ரீச்சர் நீங்கள் வாங்கோ என அழுதான்." மாலதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீச்சரால் எதுவும் சொல்ல முடியாது மௌனம் சாத்தித்தார்.

மாலதி ரீச்சரின் கட்டுறுதி பயிற்சி 10 வது நாள் இன்றுடன் முடிவடைகிறது. மாலதி ரீச்சரிற்கு நிறைய தீபாவளி வாழ்த்துக்கள், கவிதைகள் எனக் குவிந்தன. ரீச்சரைப் "போக வேண்டாம்" என மாணவர்கள் கெஞ்சினார்கள். அழுத விழிகளுடன் தனராஸ். இதைப் பார்த்த சுகந்தினி ரீச்சரிற்கு "நான் பிள்ளைகளின் மனதை புரியாது அவர்களைத் தண்டித்துள்ளேன்". என சொல்லி மாலதி ரீச்சரிடம் வருத்தமடைந்தார். மாலதி ரீச்சர் "தனராஸ் நல்லாய் படிக்கக் கூடிய பிள்ளை அவன் உளப் பிரச்சினை காரணமாகத்தான் இவ்வாறு செயலற்றிருந்தான். இப்போது அவன் துலங்க ஆரம்பித்துள்ளான். இவ்வாறே நீங்கள் அன்பு, பாசத்தை கொடுத்து நல்லாய் படிப்பியுங்கோ" என்ற மாலதி ரீச்சரின் சொல்லுக்கு சுகந்தினி ரீச்சர் ஒப்புக் கொண்டார்.



மாணவர்கள் "போகாதயுங்கோ ரீச்சர், போகாதயுங்கோ ரீச்சர்" என மன்றாடினார்கள் ஆனால் மாலதி ரீச்சர் கலங்கிய விழிகளுடன் இரண்டு மணி யாழ்ப்பாண பஸ்சில் ஏறுகிறார்

**முற்றும்.**

"ஒரு ஆசிரியர் கற்றல் - கற்பத்தலினை நிகழ்த்தும் போது மாணவர்களின் உளப் பிரச்சனைகளை அறிந்திருக்க வேண்டும். தண்டனை கொடுக்கும் போதும் மாணவன் அதை ஏற்கும் மனநிலையில் உள்ளானா? என்பதை அறிந்திருக்க வேண்டும்

**"ஆசிரியர்களுக்கும் ஆசிரியராக வரப்போகிறவற்கும் இது சமர்ப்பணம்".**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்தமனம் அல்ல உதயம் 4



மாலை மறைந்து இருள் சூழ்ந்து கொண்டிருந்தது பிள்ளையார் கோவில் மணி ஒலித்தது. முற்றம் கூட்டிக் கொண்டிருந்த கீதாவுக்கு நேரம் 6 மணி ஆகிவிட்டதென ஊகிக்க முடிந்தது. கிணற்றடிக்கு சென்ற கீதாவிடம் அம்பிகை "இவற்றை தோய்த்து விடு" என்று கூறும் போது சிவா மாமாவின் குரல் கேட்டு அம்பிகை அன்றி உள்ளே போய்விட்டார். உடுப்புக்களை ஊற வைத்து விட்டு அருகில் உள்ள கிணற்றுக் கட்டில் அமர்ந்த, கீதா ஒரு கணம் தன் தாயை நினைத்தாள். "அம்மா இருந்திருந்தால் என்னை உடுப்பு தோய்க்க விட்டிருப்பாவா?" எண்ணம் வரும் போது மனது வலித்தது புண்ணின் மேல் ஊசி ஏறுவது போல் புளுவாய்த் துடித்தது கீதாவின் உள்ளம்.

திடீரென்று கிணற்றில் சிவா மாமா தண்ணீர் அள்ளும் சத்தம் கேட்டு திடுக்கிட்ட கீதா கண்ணில் கசிந்த நீரைத் துடைத்துக் கொண்டு ஊற வைத்த வாளியை எடுக்கும் போது சிவா மாமா "கவலைப்படாதை பிள்ளை உன்ர மனசைப் போல நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசமாக வாழ்வாய்" என்று கூறினார். வெந்த புண்ணாக இருந்த இதயத்தை இவரது வார்த்தை ஆறுதல்படுத்தியது. உடுப்புக்களை கொடியில் விரிக்கும் போது உள்ளே விஜய் ரி.வியில் தெய்வம் தந்த வீடு தொடங்கிய சத்தம் கேட்டு அவசரமாக உடைகளை விரித்து விட்டு உள்ளே சென்றாள்.

காலையில் இருந்து முழு வேலையையும் வேலைக்காரி மாதிரி செய்து முடித்த கீதா இனி மேலாவது ஓய்வாக இருக்கலாம் என எண்ணினாள். உள்ளே சென்ற போது அவளுக்காகப் பல வேலைகள் காத்துக் கிடந்தன. அம்பிகை அன்ரியும், மகள் பாமினியும் ஓய்யாரமாக குசன் சீற்றில் அமர்ந்து மிக்சர் சாப்பிடும் போது உள்ளே சென்ற கீதாவைக் கண்டதும் பாமினி, அம்பிகை அன்ரியைப் பார்த்து "வந்திட்டா" என்று மெதுவாகக் கூறியது. கீதாவின் காதிலும் விழுந்தது. அம்பிகை அன்ரி கீதாவைப் பார்த்து "இன்றைக்கு நீயே சமைத்து விடு என்னால ஏலாமல் இருக்கிறது" என்றதும், கீதா "சரி அன்ரி" என்று சமயலைறைக்குச் சென்றாள். புட்டைக் கொத்தி அடுப்பில் வைத்து விட்டு, மரக்கறிகளை வெட்டிக் கொண்டிருந்த கீதாவிற்கு அந்த இன்பமயமான அம்மா, அப்பாவுடனான வாழ்க்கை நினைவுக்கு வந்தது. அதேவேளை கொடூர யுத்தம் நினைவுக்கு வந்து இன்பம் கசந்த போது கீதாவை பழைய நினைவு மீட்கத் தொடங்கியது.

கீதா,சிவநாதனிற்கும், மீனாட்சிக்கும் தவம் இருந்து பெற்ற ஒரே வாரிசாக இருந்தாள். வீட்டில் எந்த வேலை கூட கீதாவை செய்ய மீனாட்சி விடவேமாட்டார். பாடசாலைக்கு அப்பா சிவநாதன் ஏற்றிக் கொண்டு போய் ஏற்றிக் கொண்டு வருவார். கீதா எதை ஆசைப்பட்டாலும் எந்தக் கஸ்டத்தின் மத்தியிலும் அதை தன் அன்பு மகளுக்கு வாங்கிக் கொடுத்து விடுவார்கள். இவ்வாறு ஒரே பிள்ளையாக இருந்து முழுமையான செல்லத்தைப் பெற்று மகிழ்ச்சியாக இருந்தாள் கீதா. O/L பரீட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்து A/L படிக்கும் போது "நான் ஒரு தமிழ் ஆசிரியராக வேண்டும். கலைப் பிரிவு படிக்கப் போகிறேன்" என ஆசைப்பட்டாள். சிவநாதனிற்கும் மீனாட்சிக்கும் தன் பிள்ளை டாக்டராக வர வேண்டும் என்ற ஆசை இருந்த போதிலும் மகளுக்காக அதை மறந்து கீதாவின் விருப்பத்தை நிறைவேற்றினார்கள்.

கையில் ஏதோ வெட்டியதுபோலிருந்து திடுக்கிட்டு சுய சிந்தனைக்கு வந்த கீதாவின் கையில் இரத்தம் சீறிப் பாய்ந்தது. மரக்கறி வெட்டியவேளை கையையும் சேர்த்து வெட்டிவிட்டாள். "என் அம்மா, அப்பா இருந்திருந்தால் இப்படி இரத்தம் சிந்த விட்டிருப்பார்களா?" என மனம் வருந்தினாள். சமையலை முடித்து விட்டு மாடு கத்திய சத்தம் கேட்டு மாட்டிற்கு வைக்கோல் போடுவதற்குச் சென்ற கீதாவின் மனம் ஏனோ அன்று முழுவதும் தன் குடும்பத்தையே நினைத்து மெழுகுவர்த்தி போல் உருகிக் கொண்டிருந்தாள். கீதாவின் மனதில் பல எண்ண அலைகள் ஓடின.

என் அப்பாவுடன் ஒன்றாய் பிறந்த அக்கா தானே அம்பிகை அன்ரி. பாமினிக்கும் எனக்கும் ஒரே வயதுதானே ஆகிறது. ஏன் என்னை மட்டும் வேலை வேண்டி கஸ்டப்படுத்துகிறார் என எண்ணிய கீதாவின் மனம் பழைய ஞாபகங்களை மீட்கத் தொடங்கியது.

கீதாவின் குடும்பம் கிளிநொச்சி இராமநாதபுரத்தில் சொல்ல முடியாத அளவிற்குப் பணக்காரர்களாய் காணப்பட்டார்கள். சிவநாதன் தன் சொத்தில் பாதியை அம்பிகை அன்ரிக்கு சீதனமாகவே கொடுத்து விட்டார். அம்பிகை அன்ரி ஒவ்வொரு மாதமும் கீதா வீட்டிற்குச் சென்று கீதாவுடன் கொஞ்சிக் குலாவி அன்பு மொழி பேசிய நாடகத்தில் கீதா ஏமாந்து அம்பிகை அன்ரியை நம்பி விட்டாள். அம்பிகை அன்ரி ஒவ்வொரு மாதமும் வரும் போது சிவநாதனிடம் காசு, தேங்காய், நெல் என எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிக் கொண்டேதான் போக நினைப்பவள். கீதாவிடம் பாமினிக்கும் என்று பல நகைகளையும் வாங்கி கொண்டு போய் சேர்த்தவ தான் அம்பிகை அன்ரி.

கன்றுக் குட்டி துள்ளி ஓடிய சத்தத்தில் சுய நினைவிற்கு வந்த கீதா தன்னிடம் அம்பிகை அன்ரி தேவைக்கு மட்டுமே பாசத்தை நாடகமாக்கியமை அவளின் மனதைக் குத்தியது. அன்று இருந்த பாசம் இன்று எங்கே போனது? ஏன் என்னை வேலை வாங்கிக் கொண்டது மட்டுமில்லாது, என்ர படிப்பையும் சிதைத்து என் வாழ்க்கையை நிர்க்கதி ஆக்கியது வலித்தது. சிறிய முள் குற்றியதைக் கூட தாங்க மாட்டாத கீதா இன்று .....?

பெரிய மாடுகளைக் கட்ட வந்த சிவா மாமா கீதாவைப் பார்த்து "ஏன் பிள்ளை இந்த நுளம்புக்குள்ள நிற்கிறாய். உள்ளே போய் இரு" என்று சொல்லியிருந்தது. அவர் மீதான மதிப்பைக் கூட்டியது. "பாவம் சிவா மாமா ரொம்ப நல்லவர். அவரின் சொல்லை அம்பிகை அன்ரியோ, பாமினியோ கேட்பதில்லை" என நினைத்த போது வெறுப்பு வந்தது. உள்ளே சென்ற கீதா எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து சத்தம் போடாமல் ஒரு மூலையில் உட்கார்ந்தாள். இந்த வீட்டில் எல்லோரும் சாப்பிட்டு நாய்க்கும் சாப்பாடு வைத்ததன் பின்பு தான் கீதா சாப்பிடலாம் என்பது அம்பிகை அன்ரி வைத்த சட்டமாக உள்ளது. "ராணி போல இருந்த எனக்கு இப்படி ஒரு நிலை" என நினைத்து கண்ணீர் விட்டாள் கீதா. அம்மா, அப்பாவோட நானும் போயிடலாம் என நினைத்த போது அந்த யுத்தம் கீதாவின் கண்ணில் படர்ந்தது.

** ** ** **

இன்று கீதாவின் பிறந்த நாள் மாலை 6 மணி ஆகியது. "டுமார்" என ஒரு பெரிய சத்தம். யாரிற்கும் எதுவும்

புரியவில்லை. பக்கத்து வீட்டுக்காரர் சாமான்களை அவசரமாகக் கட்டிக் கொண்டு இருந்தார்கள். வயலிற்கு சென்ற சிவநாதன் இன்னும் வீடு வந்து சேரவில்லை. மீனாட்சி வேலிக்குள்ளால் எட்டிப் பார்த்து "குமார் அண்ணை என்ன பிரச்சினை என்று பதைபதைத்தாள்." "ஆமிக்காரங்கள் ஆனையிறவு தாண்டி வந்திட்டாங்களாம் நீங்களும் ஓடுறதுக்கு ரெடியாகுங்கோ" என்று சொல்லி முடிக்க முன் "டுமீல்...டுமீல்" என்ற ஓசையோடு வெடித்த செல் குண்டுகளின் ஓசைகள் அதிர்வுகளை ஏற்படுத்தின.

கீதாவின் மனதில் "இன்னும் அப்பா வீடு வந்து சேரவில்லையே" என்ற பதற்றம். மீனாட்சி அவசரமாக கையில் அகப்பட்ட பொருட்களை எல்லாம் ஒரு உரபாக்கில் கட்டிக் கொண்டிருந்தாள். கீதா படலை வாசலை பார்ப்பதும், வீட்டிற்குள் வருவதுமாய் தந்தையைக் காணாது தவித்தாள். நேரம் செல்லச் செல்ல குண்டு மாரி பொழிந்தது. பக்கத்து வீட்டை கதைத்துக் கேட்குது "பிரச்சினை பெருத்திட்டுது இனி இருக்க முடியாது"

மீனாட்சிக்கும் கீதாவிற்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. நேரம் இரவு 7.40 ஆகியது, இன்னும் சிவநாதன் வீட்டிற்கு வரவில்லை. பக்கத்து வீட்டுக் குமார் அண்ணையின் பெடியன் சைக்கிளில் வரும் போதே கத்திக் கொண்டு வந்தான். "சந்திக் கடைப் பக்கம் செல் விழுந்துட்டுதாம் பத்துப் பேருக்கு மேலே அதிலையே செத்துட்டாங்களாம்." என்றதும் மீனாட்சி "என்ர ஐயோ" என்று கத்தினாள். கீதாவிற்கு கண் முட்டி கண்ணீர் பெருக்கெடுத்தது. இருந்தும் அம்மா, அப்பா வந்திடுவார் அதுக்குள்ளை அப்பா போயிருக்கமாட்டார் என சமாதானப்படுத்தினாள். இந்த இருட்டுக்குள் கீதாவும், மீனாட்சியும் குண்டடித்த இடத்துக்கு ஓடினார்கள். எங்கும் இரத்த வெள்ளம் "அப்பா" என்று கீதா ஓட முன்னால் கிடந்த சிவநாதனைப் பார்த்து "ஓ" என அலறினார்கள் கீதாவும், மீனாட்சியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநாதனின் உடல் முழுவதும் இரத்த வெள்ளமாக இருந்தது. குண்டுபட்டிருந்த சிவநாதனை தன் மடியில் வளர்த்தினாள் மீனாட்சி. முனகலோடு கண்விழித்த சிவநாதன் தன் கழுத்தை உயர்த்தி "நீங்கள் யாழ்ப்பாணத்தில அம்பிகை அன்றி வீட்டிற்கு போங்கோ அவள் உங்களை நல்லபடியாய் பார்ப்பாள்". என்றுத் தட்டுத் தடுமாறி கூறி முடிக்கவும் அவர் உயிர் பிரிந்தது. "ஓ" என கதறிய கீதா, மீனாட்சியின் குரல் எங்கும் சோகத்தை விதைத்தன. கீதாவின் பிறந்த தினத்தன்று தந்தையின் மரணத்தை ஜீரணிக்க முடியாத ஒரு சோகம் கீ-தாவையும், மீனாட்சியையும் ஆழ்த்தியது. வீட்டிற்கு கொண்டு வந்த சிவநாதனின் உடலோடு இரவு முழுவதும் உறங்காத விழிகளுடன் அழுது கொண்டிருந்த கீதாவையும், மீனாட்சியையும் பார்த்த குமார் அண்ணை "பக்கத்தில் எல்லோரும் இடம் பெயர்ந்திட்டினம் நீங்களும் வாங்கோ போவோம்." என்றதும் "அப்பாவை விட்டிட்டு எங்க போறது" என கீதா விம்மி விம்மி அழுதாள். மீனாட்சியால் பேசக் கூட முடியவில்லை. கீதாவின் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள தகரத்தில் குண்டு விழுந்து செல் பீஸ் ஒன்று கீதாவின் வீட்டுக் கூரையை தாக்கியது. இனியும் இருக்க முடியாது என்று, தெரிந்ததும் மீனாட்சியும் , கீதாவும் நடைப்பிணமாக செல்லத் தொடங்கினார்கள். இராமநாதபுரத்திலிருந்து நடந்து வந்து கொண்டு இருக்கும் போது வழியெல்லாம் இரத்தமும், பிணமுமாய் இருந்தது. எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு நடந்தவேளை மீனாட்சி மயக்கமுற்று விழுந்து விட்டாள். சனம் திரண்டு வந்து கொண்டிருந்தது. கீதா மீனாட்சியை இழுத்து மரத்தடியில் படுத்தினாள். மீனாட்சி நினைவற்றுக் கிடந்தாள்.

திடீரென ஒரு செல் வந்து விழுந்து அதன் பீஸ் ஒன்று மீனாட்சியின் தலையைச் சீவிக் கொண்டு சென்றது. மீனாட்சி ஒரு விக்கலுடன் உயிர் நீத்தாள். கீதாவின் பிஞ்சு உள்ளம் ஒரே நேரத்தில் இரண்டு இழப்புக்களை ஏற்க மறுத்தது. மரத்தடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று கத்தினாள், கதறினாள் எதுவித பயனுமில்லை. ஒரு பாட்டி "ஏன் பிள்ளை இதிலை இருக்கிறாய் செல் வரப் போகுது வா" என்று கீதாவை இழுத்துக் கொண்டு போனார். வழியில் எல்லாம் விம்மி விம்மி அழுத கீதா அந்தப் பாட்டியையும் தவற விட்டு தனி மரமாக நின்றாள். கால் போன போக்கில் சென்று கொண்டே இருந்தாள். இறுதியில் முள்ளி வாய்க்கால் எல்லாம் போய் படாத கஸ்டம் எல்லாம் அனுபவித்து வன்னித் துயரிலிருந்து மீண்டு ஒரு வழியாக யாழ் வந்த போது சிவா மாமா அவளை மீட்டு தன் வீட்டுக்கே அழைத்து வந்தார்.

வீட்டு வாசலில் நின்று "அம்பிகை அன்ரி" என்று அழைத்த போது அம்பிகை அன்ரி வெளியில் வந்தார். கீதா "அன்ரி என்ர அப்பா, அம்மா" என்று கூறி அன்ரியை கட்டியணைத்த வேளை அம்பிகை அன்ரி "எனக்கு எல்லாம் தெரியும் அங்காலை போ" என்று உதறி விட்டார். கீதா காயத்தின் மேல் காயம் கண்டு புளுவாய் துடித்தாள். அன்றிலிருந்து இந்த வீட்டுக்கு ஒரு சம்பளமில்லாத வேலைக்காரியாக கீதா இருக்கிறாள்.

இப்படி அழுது கொண்டே கீதா உறங்கி விட்டாள். காலை பாமினி, அம்பிகை அன்ரியால் கீதாவிடம் இருந்து பெறப்பட்ட நகைகளை எல்லாம் போட்டுக் கொண்டு, தலை நிறைய பூ வைத்து, சேலை அணிந்து வெளிக்கிட்டிருந்தாள். உள்ளே சிவா மாமா, "கீதா வெளிக்கிடவில்லையா" என்ற போது, அம்பிகை அன்ரி "வேலைக்காரி பற்றி உங்களுக்கென்ன அக்கறை" என்றதும் கீதாவால் தாங்க முடியாது இருந்தது. கீதாவால் புரிந்து கொள்ள முடிந்தது, பாமினியை பெண் பார்க்க வரப் போகிறார்கள். பெரிய கார்களில் மாப்பிள்ளை வீட்டார் வந்து இறங்கினார்கள். அம்பிகை அன்ரியின் வீட்டிற்கு, உள்ளே முழுமரியாதையுடன் மாப்பிள்ளை வீட்டார் அமர்ந்தார்கள். பாமினி அலங்கரிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டாள். கீதா வந்தவர்களிற்கு சிற்றாண்டி பரிமாறினாள். மாப்பிள்ளைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாமினியை விட கீதாவையே பிடித்துப் போயிருந்தது. இதைப் பற்றி மாப்பிள்ளை வீட்டார் சிவா மாமாவிடம் கேட்ட போது அவரிற்கு எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. மாப்பிள்ளை வீட்டார் "எதுவித சீதனமும் தேவையில்லை பெண் மட்டுமே போதும்" என்று கூறிவிட்டார்கள். மேலும் சிவா மாமாவிடம் "நீங்கள் சம்மதித்தால் வெகு விரைவில் திருமணப் பதிவு செய்து கீதாவையும் மாப்பிள்ளையோடு வெளிநாட்டுக்கு அனுப்பி விடலாம்" என்றனர். சிவா மாமா உடனே கீதாவுக்கு கல்யாணம் செய்து வைக்க முடிவு எடுத்தார்.

இதனை அறிந்த அம்பிகை அன்ரி போர்க் கொடி தூக்கி திருமணத்தை நடக்க விடமாட்டேன். என சபதம் கொண்டார். அம்பிகை அன்ரி யாருக்கும் தெரியாமால் மாப்பிள்ளை வீட்டாருடன் தொடர்பு கொண்டு கீதாவைப் பற்றி இல்லாத பொல்லாத புரளிகளைக் கிழப்பினார். ஆனால் மாப்பிள்ளை வீட்டாரோ முன் கூட்டியே கீதாவைப் பற்றி விசாரிக்கும் போது அயல் வீட்டார் அம்பிகை அன்ரியின் கொடுமைகளை கூறியிருந்ததனால் அவர்கள் இதை ஏற்க மறுத்தனர். அம்பிகை அன்ரியின் சூழ்ச்சிகள் எதுவும் வெற்றி பெறவில்லை. அம்பிகை அன்ரி தன் மகளுக்கு கிடைக்காத வாழ்க்கை கீதாவிற்குக் கிடைக்கப்போகிறது என குமுறினாள். எல்லாத்தடைகளையும் தாண்டி சிவா மாமா தானே முன் நின்று கீதாவின் திருமணத்தை நடாத்தி முடித்தார். வேலைக்காரியாக இருந்த கீதா வீட்டு எஜமானி ஆகிவிட்டாள். வேலை வாங்கின அம்பிகை அன்ரி தன் மகள் பாமினியின் வேலைக்காரி போல் வேலை செய்து புலம்புகிறார்.

**முற்றும்.**

"மனித மனங்களில் உள்ள உணர்வுகளையும், வலி வேதனைகளையும் மதிக்க தெரிய வேண்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை

# 5



மழை கொஞ்சம் ஓய்ந்து போயிருந்தது. வகுப்பறைத் தகரத்தில் விழுந்த மழைச் சத்தம் நின்று விட்டது. வகுப்பறைகளில் மாணவர்கள் பெரிய சத்தமிட்டு கத்திக் கொண்டிருந்தனர். வேறு சில மாணவர்கள் கப்பல் செய்து மழை வெள்ளத்தில் விட்டபடி மழையில் கூத்தாடிக் கொண்டிருந்தனர். சில வகுப்பறைகளில் மாணவர்கள் தம்மை ஆசிரியர்களாகப் பாவனை செய்து கரும்பலகையில் எழு-திக் கொண்டிருந்தனர். காலை 10 மணியைத் தாண்டியிருக்கும் அப்போது தான் சில பெற்றோர் தம் பிள்ளைகளுடன் உள்ளே வந்து கொண்டிருந்தனர். இரண்டு ஆசிரியர்கள் வெளிமாவட்டத்திலிருந்து அப்போது தான் பஸ்சில் இருந்து இறங்கிப் பாடசாலைக்குள் நுழைந்து கொண்டிருந்தனர்.

ஆசிரியர் ஓய்வு அறையினிலே பெரிய கலகலப்பு சத்தங்கள் பாடசாலை வளாகத்தில் எதிரொலித்தது. அங்கே ஆசிரியர்கள் ஒன்று கூடி தம் குடும்பக் கதைகளைச் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அன்ரனி சேர் சொன்னார் “எங்கட அதிபர் இப்ப மெடிக்கல் லீவில நிக்கிறார். எப்ப வருவாரோ தெரியாது” என்று' கஜன் சேர் சொன்னார். “அவர் லொறியோட போய் மோதி அடிபட்டதால கால் முறிஞ்சு போச்சு, எப்படியும் ஆறு மாதத்திற்கு மேல் அவரால பூரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமடைய முடியாது" என்றார். அங்கே இருந்த மற்றைய ஆசிரியர்கள் "அப்பாடா இப்பதான் நிம்மதி. நாங்கள் இந் தக் காட் டுப் பாடசாலைக் கு வந் து போறதே பெரிய விடயம் அதில இதுகளுக்கு படிப்பிக்கிறது எங்களாலை ஏலுமோ" என்று கூறிக் கொண்டிருக்க சில ஆசிரியர்கள் அதை ஆமோதித்து ஏற்றார்கள்.

அதிபர் அறையினுள் சிதம்பரம் தானே அடுத்த அதிபராக வரவேண்டும் என்று தன்னை அதிபராக பாவனை செய்து அதிபர் இருக்கையில் அமர்ந்து ஏனைய ஆசிரியர்களுக்கு வேலை ஏவிக் கொண்டிருந்தார். சிதம்பரம் சேரிற்கு தானே அடுத்த அதிபராக வரவேண்டும் என்ற ஆசை இருந்தது. சிதம்பரம் சேர் தன் மாமாவான வலயக் கல்விப் பணிப்பாளர் பரமநாதன் சேரிற்கு போன் செய்தார். போனை எடுத்த பரமநாதன் சொன்னார் "சொன்னபடி அதிபருக்கு சூழ் ச் சி செய் து போட் டாய் போல இருக் கு, கண்டிப்பாய் உன்னை அடுத்த அதிபராய் உந்தப் பாடசாலைக்கு வரவைப்பேன்" என்று கூறியதும் சிதம்பரத்திற்கு அளவற்ற மகிழ்ச்சி தரம் 2A க்கு படிப்பித்துக் கொண்டிருந்த செல்வி ரீச்சரிற்கு பக்கத்து வகுப் புச் சத் தம் காதைக் கிழித் துக் கொண் டு போனது.பக்கத்து வகுப்பாசிரியர் பாடசாலைக்கு வந்திருந்தும் வகுப்புக்கு வராமல் ஓய்வறையில் சல்லாபம் அடித்துக் கொண்டிருந்தது செல்வி ரீச்சருக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. அதிபர் இருந்திருந்தால் இப்படி எல்லாம் இருந்திருக்க மாட்டார்கள். அதிபர் ஓரளவு கட்டுப்படுத்தித் தான் பாடசாலையை நடாத்தி இருந்தார். இருந்தும் அவர் பாடசாலைச் சொத் துக் களைத் தனக் குச் சொந் தமாக் க நினைப்பவர். பாடசாலைக் கதிரைகள், மேசைகள் என தன் வீட்டிற்கு கொண்டு போய் சேர்த்தவர் என்று நினைத்தார் செல்வி ரீச்சர். "இந்தப் பாடசாலைக்கு எப்போது தான் விடிவு காலம் வருமோ" என்று செல்வி ரீச்சர் பெரு மூச்சு விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியம் இடைவேளை விட்டது சிதம்பரம் சேர் அதிபர் இருக்கையில் அமர்ந்திருந்து ஏனைய ஆசிரியர்களுக்கு தான் ஒரு அதிபர் போல் கட்டளையிட்டுக் கொண்டிருந்தார். சிதம்பரம் வயது கூடியவராக காணப்பட்டமையினால் ஆசிரியர்கள் அவரின் வயதிற்கு மதிப்பளித்து இவர் சொல்லும் வேலைகளைச் செய்தார்கள்.

திடீரென அந்தப் பாடசாலை வளாகத்தினுள் புதிதாக ஒரு பெண் காலடி வைத்தார். சற்று உயரமாகவும் ஓரளவு உடற் தோற்றத்தையும் கொண்டவராகக் காணப்பட்டார். நெற்றியில் இட்ட குங்குமப்பொட்டு திருமணமானவர் என்பதைக் காட்டிக் கொடுத்தது. உள்ளே நுழைந்த பெண், அதிபர் அறையினுள் நுழைவதைப் பார்த்தவர்கள் அதிபர் அறைப் பக்கம் வந்து சேர்ந்தனர். எல்லோரும் வியப்போடு அந்தப் பெண்ணை பார்த்தார்கள். சிதம்பரம் சேர் அதிபர் இருக்கையில் இருந்து அதிபரைப் போன்று "யார் நீங்கள்? என்ன வேண்டும்?" என வினாவினார். "என் பெயர் சுந்தரி. நான் இந்தப் பாடசாலைக்கு பதில் அதிபராக நியமிக்கப்பட்டு வந்துள்ளேன்." என்றதும் அங்கே நின்றவர்கள் வியந்து போய் பார்த்தார்கள். சிதம்பரத்திற்கு பெரிய இடியே தலையில் வீழ்ந்தது போல் இருந்தது. இருக்கையில் இருந்து எழுந்து நின்றார். மேடம் யாரும் இல்லை என்றுதான் இந்த இருக்கையில் அமர்ந்தேன்".என்றவாறு வெளியேறினார். ஏனைய ஆசிரியர்கள் புதிய அதிபரை வரவேற்று பாடசாலையைச் சுற்றிக் காட்டினார்கள். பாடசாலை சரியாக பின்தங்கிய நிலையில் உள்ளது என்பதை சுந்தரி மேடத்தினால் புரிந்து கொள்ள முடிந்தது.

சிதம்பரத்திற்கு பரமநாதன் சேர் மீது கோபம் பொங்கியது. பரமநாதன் சேரிற்கு போன் செய்து கேட்ட போது "அதுக்கென்ன இப்ப பதில் அதிபர் தானே வந்திருக்கிறா, நீ இந்தப் பாடசாலைக்கு அதிபராகவே நான் நியமிப்பேன். நீ சுந்தரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடத்தை கலைக்கிற வழியைப் பார்" என்றார். கொஞ்சம் கோபம் தணிந்து ஆறுதலானார் சிதம்பரம்.

பணியை ஏற்றுக் கொண்ட சுந்தரி மேடம் அடுத்த நாள் காலை 7.30 க்கு பாடசாலைக்கு வந்து விட்டார். ஆனால் அங்கே மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமின்றி ஊழியர்கள் கூட வரவில்லை. கொஞ்ச நேரத்தில் சைக்கிள் சத்தம் கேட்டு திரும்பிய சுந்தரி மேடம் செல்வி ரீச்சரைக் கண்டார்.சுந்தரி மேடம் செல்வி ரீச்சரிடம் "என்ன இது இன்னும் யாரும் வரவில்லை" என கோபமாக கேட்டார். செல்வி ரீச்சர், "மேடம் இது இந்தப் பாடசாலையின் எழுதாத சட்டம் 10 மணிக்குத்தான் ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரும் முழுதாய் வந்து சேர்வார்கள்." இதைக் கேட்ட சுந்தரி மேடத்திற்கு என்ன நிர்வாகம் என வெறுப்பு ஏற்பட்டது. ஆசிரியர்கள் ஒப்பம் வைக்கும் கொப்பியை பார்த்த சுந்தரி மேடம் "என்ன எல்லோரும் 7.30 க்கு முதல் தானே ஒப்பம் வைத்துள்ளனர்" என்றார். இதுக்கு செல்வி ரீச்சர் "இங்கே சிவப்புக் கோடு அடிப்பதில்லை அதனால் எல்லோரும் விரும்பிய நேரத்திற்கு ஒப்பம் வைப்பார்கள்" என்றதும் சுந்தரி மேடம் யோசித்தார். நேரம் 8 மணியை தாண்டியது ஓரளவு மாணவர் மட்டுமே பாடசாலை வந்திருந்தனர். கோபம் கொண்ட சுந்தரி மேடம் ஆசிரியர் ஒப்பம் வைக்கும் கொப்பியில் சிவப்புக் கோடு அடித்து விட்டார். பாடசாலைக் கதவு இழுத்து மூடப்பட்டது. வந்த மாணவர்களுக்கு செல்வி ரீச்சர் பாடம் எடுத்துக் கொண்டிருந்தார். கதவுக்கு வெளியே ஆசிரியர்கள், மாணவர்கள் கதைக்கும் சத்தம் கேட்டது. இங்கே கூட்டத்துக்கிடையில் "இவர் பொல்லாத அதிபர்" எனக் கதைத்தது சுந்தரி மேடத்தின் காதிலும் விழுந்தது. "ஆசிரியர்கள் இனி பாடசாலைக்கு ஒழுங்காய், நேரத்துடன் தான் வரவேண்டும்" என்றும் கதைத்தனர். சுந்தரி மேடம் கதவைத் திறந்து மாணவர்களைப் பார்த்து "நாளைக்கு உங்கள் பெற்றோர்கள் எல்லோரும் பாடசாலைக்கு வர வேண்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கடினமாக உத்தரவிட்டார் "ஆசிரியர்களைப் பார்த்து" நீங்கள் ஒப்பம் வைத்து விட்டு ஒன்று கூடும் மண்டபத்திற்கு வாருங்கள் என்றார். ஆசிரியர்களுக்கு அங்கே பேரதிர்ச்சி செல்வி ரீச்சரைத் தவிர எல்லோரும் சிவப்புக் கோட்டிற்கு கீழ் தான் ஒப்பம் வைத்திருந்தார்கள். பத்து மணியை தாண்டிய பின் வந்த சிதம்பரம் சேரிற்கு அரை நாள் விடுப்பு எடுக்க வேண்டிய நிலை வந்தது. சிதம்பரம் சேரிற்கு கோபம் தலைக்கேறியது. இருந்தும் கட்டுப்படுத்தினார். ஒன்று கூடும் மண்டபத்திற்கு ஆசிரியர்கள் சென்று விட்டார்கள். சுந்தரி மேடத்தின் பார்வையிலும், நடையிலும் ஒரு கம்பீரம் காணப்பட்டது. கூட்டத்தில் சுந்தரி மேடம் ஆசிரியர்களைப் பார்த்து பணிவாகவும், அன்பாகவும் "ஏன் இப்படி செய்கிறீர்கள்" என்று கேட்டார். ஆசிரியர்கள் மௌனம் சாதித்தார்கள். சுந்தரி மேடம் "ஆசிரியத் தொழில் என்பது ஒரு வாண்மைத்துவம். அது கடவுளால் தரப்பட்ட ஒரு கொடையாகும். இதை ஏன் வீணாக்குகிறீர்கள்" என்றதும் ஆசிரியர்களின் மனதில் சுட்டது. "தரம் 5 வரை உள்ள இந்தப் பாடசாலை மாணவர்கள் உங்களை நம்பி வரும் போது அவர்களை ஏமாற்றுவது நியாயமானதா?"

இந்தக் கேள்விக்கு யாராலும் பதில் கூற முடியாது போனது. ஒரு சில ஆசிரியர்கள் தாம் செய்தது பிழை என்பதை ஏற்றுக் கொண்டனர். ஏனைய ஆசிரியர்களும் நாம் சிறந்த முறையில் இளைய சமுதாயத்தை உருவாக்க வழிவகுப்போம் என்றனர். சுந்தரி மேடத்திற்கு மகிழ்ச்சி பொங்கியது. சுந்தரி மேடம் "இந்தப் பாடசாலையை முன்னேற்ற முடியும் என்ற நம்பிக்கை நீங்கள் சொன்ன வார்த்தைகளிலிருந்து வந்துள்ளது" என்றார். இதைப் பார்த்த சிதம்பரத்திற்கு, "எனக்கெதிராய் எல்லோரும் மாறிவிட்டார்கள்" என்று கொதித்தார். கோபம் பொங்கியது. சுந்தரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடத்தை ஓடஓட கலைக்க வேண்டும் என சபதம் கொண்டார்.

அடுத்த நாள் மாணவர்கள் சுந்தரி மேடத்தின் மீதிருந்த பயத்தினால் எல்லோருடைய பெற்றோரையும் அழைத்து வந்திருந்தனர். சுந்தரி மேடம் பெற்றோருடன் ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டார். பிள்ளைகளின் கல்வி நிலை பாடசாலை வறுமை போன்றவற்றை எடுத்து விளக்கிய போது பெற்றோருக்கு சுந்தரி மேடத்தின் மீது மரியாதை பிறந்தது. சில பெற்றோர்கள் தாம் இந்தப் பாடசாலைக்கு நிதி உதவி செய்வதாகக் கூறினர். சிலர் "பாடசாலையைத் துப்பரவு செய்ய நாம் ஒன்றிணைவோம்" என்றனர். பெற்றோரின் ஒத்துழைப்பு சுந்தரி மேடத்திற்கு சந்தோசத்தை உண்டாக்கியது. சிதம்பரம் சேரிற்கு பெற்றோர், ஆசிரியர் சுந்தரி மேடத்துடன் ஒன்றிணைந்தது பெரும் ஆவேசத்தை உண்டாக்கியது. சுந்தரி மேடத்திற்கு எதிராகப் பல புரளிகளை ஆசிரியர்களிடையே விதைத்தார். ஆசிரியர்கள் இதை ஒரு காதில் கேட்டு மறு காதால் விட்டு விட்டுச் சென்றனர்.

பாடசாலை வேகமாக முன்னேறிக் கொண்டே சென்றது. இது வரை காலமும் விளையாட்டுப் போட்டி நடைபெறாத இந்தப் பாடசாலையில் ஒரு புரட்சியாக சுந்தரி மேடத்தினால் விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டது. இதற்கு பிரதம விருந்திரனராக கல்விப் பணிப்பாளர் அழைக்கப்பட்டார். கல்விப் பணிப்பாளரிற்கு பாடசாலையைப் பார்த்ததும் அதிர்ச்சியாக இருந்தது. புதிய தோற்றம், தோட்டம், அழகிய வகுப்பறைகள் எனப் பாடசாலை புதுமையாக காட்சியளித்தது. விளையாட்டுப் போட்டி வெகு விமர்சையாக நடைபெற்றது. போட்டிகள், விழாக்கள், என எல்லாம் பாடசாலையில் கொண்டாடப்பட்டன. பேச்சு, கவிதை, கட்டுரை, நடனம், சிறுவர் நாடகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெல்லாம் வரும் போட்டிகட்கு இப் பாடசாலை மாணவரும் சென்று கொண்டே இருந்தனர். ஆசிரியர்கள் தம் திறமைகளை வெளிக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், எல்லோரிற்கும் சுந்தரி மேடத்தின் மீது மதிப்பும், மரியாதையும் உண்டானது. கல்வியறிவற்றிருந்த அந்தப் பாடசாலையில் இப்போது கல்வியறிவு பொங்கி வழிந்தது. புலமைப் பரிசில் பரீட்சை சித்தி வெளியீடுகள் வெளிவந்தன. இந்தப் பாடசாலையில் 30 மாணவர்கள் பரீட்சை எழுதி 05 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டி அதி கூடிய சித்திகளைப் பெற்றனர். வலயம், கோட்டம் இந்தப் பாடசாலையை பாராட்டியது. சிதம்பரம் சேரால் இதைப் பொறுக்கவே முடியவில்லை. பல மொட்டைக் கடதாசிகளை வலயத்திற்கு அனுப்பினார். பரமநாதன் சேர் இந்தக் கடதாசியுடன் பாடசாலைக்கு வந்தார். பதில் அதிபர் பதவியிலிருந்து விலக வேண்டும் என விரட்டினார். "பாடசாலை சொத்துக்களை சூறையாடுவதாக கடதாசிகள் வந்துள்ளன" என்றார் சுந்தரி மேடம் எதுவித பயமுமின்றி "என்னை நியமித்தவருடன் நான் கதைப்பேன்" என்று கூறினார். பரமநாதனிற்கு தன்னை எதிர்த்ததாக நினைத்து கோபம் வந்தது. "உன்னை நியமனத்தில் இருந்து நீக்குகிறேன்" என்று சவால் விட்டுச் சென்றார்.

சிறந்த அதிபர்களிற்கான பிரதீபா பிரபா விருது சுந்தரி மேடத்திற்கு கிடைத்தது. இவற்றை எல்லாம் வெளியிலிருந்து அறிந்து கொண்ட பாடசாலையின் பழைய அதிபருக்கு "எப்படி ஆகியிருக்க வேண்டிய பாடசாலையை நான் பாடசாலை சொத்தை அபகரித்து மண்ணாக்கி விட்டேனே" என நினைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கவலை வந்தது. எனக்கு கால் உடைந்து போனது கூட இப்படி ஒரு நல்ல விடயம் நடக்கத்தான் என நினைத்து பெருமிதமடைந்தார்.

சிதம்பரம் சேர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிய மொட்டைக் கடதாசி ஒன்று தவறுதலாக மாகாணப் பணிப்பாளரின் கைகளில் கிடைத்தது. கடிதத்தைப் பார்த்த மாகாணக் கல்விப் பணிப்பாளர் அந்த எழுத்து அந்தப் பாட-சாலையில் யாருடையது என்பதை அறியுமாறு ஊழியருக்கு பணித்தார். அது சிதம்பரம் சேரின் எழுத்து என்பது அறியப்பட்டது. அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளர் சுந்தரி மேடத்தை மிரட்டியதும் தெரிய வந்தது.

மாகாணக் கல்வி பணிப்பாளரினால் ஒழுங்குபடுத்தப்பட்டு கல்வியமைச்சில் இது சம்பந்தமாக ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் சுந்தரி மேடத்திற்கு இப் பாடசாலையில் நிரந்தர நியமனம் வழங்குமாறு கூறப்பட்டது. பரமநாதன் சேரிற்கும், சிதம்பரம் சேரிற்கும் வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. பாடசாலை முன்னாள் அதிபர் தூர இடப் பிரயாணம் செய்ய முடியாத காரணத்தினால் அருகாமையில் ஒரு பாடசாலையில் அதிபர் பதவி கிடைத்தது.

பாடசாலை ஆசிரியர், மாணவர், பெற்றோர் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார்கள். சுந்தரி மேடத்திற்கு கழுத்து நிறைய மாலைகள் அணியப்பட்டு புது அதிபராக பதவியேற்று வரவேற்கப்பட்டார்.

**முற்றும்.**

**"தன் கடமையைச் சரிவர செய்பவன் எப்போதும்**
**யாருக்கும் அடிபணியத் தேவையில்லை."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேண்மைத் தீ 6



மணிக்கூடு அதிகாலை 4 மணியைக் காட்டிய போது "டாங்.... டாங்" என்று அலாரம் அடித்தது. போர்வைக்குள் சுருண்டு படுத்திருந்த மதன் கண் விழித்தான். சந்தியில் மின்சாரக் கம்பி அறுந்து விழுந்திருந்ததனால் இரவிலிருந்து மின்சாரம் தடைப்பட்டிருந்தது. கைவிளக்கைக் கொழுத்திய மதன், முகத்தை அலம்பிக் கொண்டு வரலாற்றுப் புத்தகத்துடன் மேசையில் அமர்ந்தான். தாயார் பார்வதி "தம்பி ஏன் இந்தப் பனிக்குள்ள எழும்பியிருக்கிறாய்? கரண்டும் இல்ல படுத்திட்டு காலையில வெளிச்சத்தில் படியுங்கோவன்" என்றார். இல்லை அம்மா இன்னும் இரண்டு கிழமையில் O/L சோதனை வரப் போகிறது. இப்பவே படித்தால் தான் நான் 9A எடுக்க முடியும் என்றான். இரவு பகலாய் அயராது படித்தவன் தான் மதன். பார்வதிக்கும், பாலசிங்கத்துக்கும் ஒரே பிள்ளையாய் பிறந்தான். மதன் தன் நேரம் முழுவதையும் படிப்பினிலே செலவு செய்தான்.

காலை 7 மணிக்கு பிள்ளையார் கோவில் சென்ற மதன் தன் பரீட்சை நுழைவு அட்டையை பிள்ளையார் முன் வைத்துப் பூசை செய்வித்தான். மதன் படித்த நிறைவுடன் பரீட்சை எழுதத் தொடங்கினான். பரீட்சைகள் முடிவடைந்தது. சுதந்திரப் பறவையாய் சுற்றித் திரிந்தான் மதன். பாலசிங்கத்துடன் வயலிற்கு சென்று வயல் வேலைகளையும் சில சமயங்களில் செய்வான். பார்வதி பாலசிங்கத்துக்கு அடிக்கடி "என் பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு டொக்டராக வருவான் அவனை ஏன் வயலுக்கை கொண்டு போய்ப் பாழாக்கிறியள்" என்று பேசுவாள். பாலசிங்கத்துக்கும், பார்வதிக்கும் தன் பிள்ளை டொக்டராக வர வேண்டும் என்ற கனவு இருந்தது. மதனிற்கும் தான் ஒரு டொக்டராக வந்து சேவை செய்ய வேண்டும் என்ற ஆசை இருந்தது.

O/L பரீட்சை பெறுபேறுகள் வெளி வர முன்னே மதன் ரவுணில் உள்ள பெரிய கல்வி நிறுவனத்தில் விஞ்ஞானத் துறை படிப்பை A/L க்கு ஏற்றவாறு படிக்க ஆரம்பித்தான். மதன் இப்படியே தொடர்ந்து படித்துக் கொண்டிருந்த வேளை O/L பரீட்சை பெறுபே-றுகள் வெளியாகின. மதன் படிக்கக் கூடிய பிள்ளை என்றபடியால் ரகு சேர் இன்டநெட்டில் பெறுபேற்றை பார்த்துவிட்டு மதன் வீட்டிற்கு ஓடி வந்தார். பார்வதியும், பாலசிங்கமும் நெல் அவித்து முற்றத்து வெயிலில் காய வைத்துக் கொண்டிருந்தார்கள். மதன் மரத்தின் மேல் ஏறி மாங்காய் பிடுங்கிக் கொண்டிருந்தான். ரகு சேர் மதனின் வீட்டு வாசலில் வந்து பார்வதியையும், பாலசிங்கத்தையும் பார்த்து "உங்க பிள்ளை O/L பரீட்சையில் 9A எடுத்து பாடசாலையில் உயர்ந்த பெறுபேறு பெற்று சாதனை படைத்துள்ளான்" என்றார். இதைக் கேட்ட மதன் மேலே இருந்து குதித்தான். வாசலில் நின்ற ரகு சேரின் காலில் விழுந்து வணங்கி "சேர் உங்களாலை தான் நான் நல்ல சித்தியை பெற்றேன்" என்றான். ரகு சேர் இல்லை மதன் உன் உழைப்பும், முயற்சியுமே உன்னை நல்ல பெறுபேறு எடுக்க வைத்துள்ளது என்றார்.

பாடசாலை எங்கும் மதனிற்கு வாழ்த்துக்களும், அன்பளிப்புக்களும் குவிந்தன. ஊரெல்லாம் மதனின் திறமையைப் பற்றியே தான் ஒரே பேச்சு. பார்வதிக்கும், பாலசிங்கத்துக்கும் எல்லையற்ற மகிழ்ச்சி. "எங்களை எங்கட பிள்ளை படிச்சுக் காப்பாற்றுவான்" என்று பெருமிதமடைந்தார்கள். இவற்றைப் பார்த்துக் கொண்டு இருந்த மதனுடன் நெருங்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகிய சினேகிதன் ராமுவிற்கு கோபம் வந்தது. "என்னுடன் ஒன்றாய்ப் படித்துவிட்டு என்னை விட கூடிய சித்தியைப் பெற்று எல்லோருடைய பாராட்டையும் பெறுகிறான்" என நினைத்துப் பொறாமை கொண்டான்.

மதனை இப்படி A/L இலும் நல்ல சித்தியைப் பெற்று டாக்டராக விடக் கூடாது என முடிவு எடுத்தான். மதனுடன் உயிர்த்தோழன் போல் ஒன்றாய் பழகி வீட்டிற்கு எல்லாம் வந்து போக ஆரம்பித்தான்.

மதனும் ராமுவும் வகுப்பு முடிந்து வந்து கொண்டிருந்த வேளை ராமு மதனிற்கு ஒரு பீடாவை சாப்பிடுமாறு கொடுத்தான். மதன் "எனக்கு வேண்டாம் நான் வெற்றிலை சாப்பிடுவதில்லை" என்றான். ராமுவின் வற்புறுத்தலினால் எதுவும் செய்ய முடியாது அதை வாங்கி சாப்பிட்டான். அதை சாப்பிட்டதும் மதனிற்கு எங்கோ பறப்பது போலிருந்தது, தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று கூடத் தெரியவில்லை. பாவம் மதன் ராமு போதை மருந்து கலந்து கொடுத்த பீடாவை உண்டு விட்டு ராமுவின் சொல்லிற்கு ஆட ஆரம்பித்தான். அடிக்கடி அந்த பீடா வேண்டும் எனக் கேட்டான்.

ராமு தான் சொல்வதை செய்தால் மட்டுமே பீடா தருவேன் என மிரட்டினான். மதன் வேறு வழியின்றி ராமு சொன்னது போல் குடிக்கத் தொடங்கினான். தினமும் வீட்டிற்கு நேரம் தவறி குடித்து விட்டுச் செல்லலானான். பாவம் தன் பிள்ளையை முழுமையாக நம்பிய பார்வதியும், பாலசிங்கமும் பிள்ளை இரவு முழுக்க கஸ்டப்பட்டு படிக்கிறான் என நினைத்தார்கள்.

மதனிற்கு பாடங்களில் புள்ளிகள் எல்லாம் குறையத் தொடங்கின. வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருட்களை எல்லாம் விற்று பீடா, சாராயம் என வாங்கத் தொடங்கினான். ராமு கொஞ்சம் கொஞ்சமாக மதனை போதைக்கு அடிமையாக்கி தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிற்கு ஆடும் பொம்மை ஆக்கி விட்டான். இப்போது மதன் வகுப்புக்களிற்கும், பாடசாலைக்கும் ஒழுங்காகப் போவதில்லை. ராமு மதனை இப்படி செய்து விட்டு தான் படிக்கலானான். அறியா வயதில் இப்படி செய்யும் காரியம் பின்பு வரும் விளைவை அவன் அறிந்திருக்கவில்லை.

இரவு 11 மணி ஆகியது,மதன் இன்னும் வீடு வரவில்லை. பார்வதியும், பாலசிங்கமும் என்ன இவ்வளவு நேர படிப்பு ஏன் மதனைக் காணவில்லை என ஏங்கினார்கள். நேரம் ஆக ஆக பார்வதி பாலசிங்கத்தை நச்சரித்தார். "ஒருக்கா போய் அந்த வகுப்பு நடக்கிற இடத்தைப் பாத்திட்டு வாங்கோ" என்றார். பாலசிங்கம் லாம்பு விளக்கையும் எடுத்துக் கொண்டு வாசலில் இறங்கிய போது படலை திறக்கும் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தார். யாரோ இருவர் மதனைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். பார்வதி என்ர பிள்ளை எனத் தவித்தாள். நாங்கள் மதனோட வகுப்பில் படிக்கிறனாங்கள். மதன் வீதியில் குடிச்சிட்டு கிடந்தவர் அதுதான் தூக்கிக் கொண்டு வருகிறோம் என்றதும் பாலசிங்கத்துக்கும், பார்வதிக்கும் நெஞ்சே வெடித்தது. பார்வதி "என்ர பிள்ளை அப்பிடி செய்திருக்க மாட்டான்" எனப் புலம்பினாள். பாலசிங்கம் சரி அதைப் பிறகு பார்ப்போம் என்று விட்டு மதனைப் பிடித்துக் கொண்டு போய் உள்ளே படுத்தினார். மதனின் அருகால் போகும் போதே மது வாடை அடித்தது. பாலசிங்கத்தால் புரிந்து கொள்ள முடிந்தது மதன் குடித்துள்ளான். ஏனோ பாவம் பார்வதிதான் துடித்தாள். "பிள்ளைக்கு ஏதோ நடந்திட்டுது" என்று அழுதாள். மதன் இரவு முழுவதும் சத்தி சத்தியாய் எடுத்தான்.

காலை 7 மணி அலாரம் அடித்தது. இன்னும் மதன் எழும்பவில்லை. பார்வதி அடிக்கடி ஓடிப்போய் காய்ச்சலோ என்று உடம்பைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தாள். உடம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்ந்து கொண்டுதான் இருந்தது. பாவம் பார்வதிக்கு எதுவும் புரியவில்லை.

பாலசிங்கம் வயலிற்குப் போய் விட்டார். நேரம் 10 மணி ஆகியது பாலசிங்கம் மண்வெட்டி எடுப்பதற்காய் வீட்டிற்கு வந்தார். பார்வதி ஓடி வந்தாள். இன்னும் மதன் எழும்பவில்லை, தட்டத்தட்ட அசைவுமில்லை என்று புலம்பினாள். பாலசிங்கம் உள்ளே ஓடிச் சென்று மதனை தட்டிப் பார்த்தார் எந்த அசைவுமில்லை. உடலெல்லாம் இறுகியிருந்தது.

பாலசிங்கம் ஓடிப்போய் சந்தியில் நின்ற ஆட்டோவை கூட்டிக் கொண்டு வந்தார். ஆட்டோக்காரனின் உதவியுடன் மதனைத் தூக்கி ஆட்டோவில் ஏற்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள். உள்ளே அவசர மருத்துவ பகுதிக்குள் மதன் சேர்க்கப்பட்டான். மதனின் உடலை பல பெரிய டொக்டர்கள் வந்து ஆராய்ச்சி செய்தார்கள். பார்வதி பல கோயில்களிற்கு நேர்த்தி வைத்துக் கொண்டிருந்தாள். டொக்டர் வெளியே வந்தார் பாலசிங்கத்தைப் பார்த்து “உங்கட பிள்ளை போதை மருந்துகளை சாப்பிட்டு அளவுக்கதிகமாய் மதுவை குடிச்சிருந்ததாலை அவர் உயிர் உடலை விட்டுப் பிரிஞ்சிட்டுது”இதைக் கேட்டதும் பார்வதி “ஓ” என அழுதாள். “என்ர பிள்ளை அப்படிப்பட்டவன் இல்லை பொய் சொல்லுறியள்” என்று கத்தினாள். பாலசிங்கத்தாலும், பார்வதியாலும் தங்கள் ஒரே மகன் பிரிஞ்சதை தாங்க முடியவில்லை.

மதன் இப்படி செய்திட்டானே என்று ரகு சேர் அதிர்ந்து போனார். பாடசாலையின் நல்ல ஒரு மாணவனை இழந்து விட்டோமே என சோகத்தில் ஆழ்ந்தனர். பார்வதியும், பாலசிங்கமும் “எங்கட பிள்ளை டொக்டரா வரவேண்டும் என்று கனவு கண்டோம் ஆனால் அது மண்ணாகிவிட்டதே” என்று அழுது புரண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் அந்த பரிதாப அழுகைக் குரல் அந்த ஊரையே உலுக்கியது. ராமுவின் வீட்டிலும் மதனின் இறப்பு பற்றி கதை அடிபட்டது. ராமுவின் தந்தை "எப்படி நல்லாய் படிச்ச பிள்ளை இப்படி குடித்து, போதைகளை பாவித்து இறந்து விட்டானே" என்று வருந்தினார். "படிக்கிற வயதில இப்படி குடிகாரன் என்ற பெயரோட இறந்திட்டானே" எனக் கதைத்தனர்.

ராமுவின் மனம் ஏனோ தான் பிழை செய்து விட்டேனோ என்று அரற்றியது. அது ராமுவிற்கு பிழையை உணராத வயதாக இருந்தது. ராமு அவன் தான் குடிச்சுத் தானே இறந்தவன், நான் குடிக்கக் கொடுத்து இறக்கவில்லைத்தானே என்று மனதை ஆறுதல்படுத்தினான். சில நாட்கள் ராமுவால் எதையும் செய்ய முடியாது சோர்ந்து போயிருந்தான். சில கிழமைகளின் பின் தன் மனதை ஆறுதல்படுத்திக் கொண்டான். தான் விரும்பியபடி டொக்டராக வேண்டும் என அயராது படிக்கலானான்.

காலம் உருண்டோடியது. ராமு A/L பரீட்சை எழுதி 3A எடுத்து யாழ்ப்பாணம் மெடிக்கல் பீடத்திற்கு உள்வாங்கப்பட்டான். ராமு படித்துக் கொண்டிருந்த காலத்தில் பயிற்சிக்காக இடையிடையே வைத்தியசாலைக்கு சென்று நோயாளிகளை பார்வையிட்டான். ஒரு முறை பயிற்சிக்காகத் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு சென்றிருந்தான். அங்கே பல விசருகள்(மனநோயாளிகள்) புலம்பிக் கொண்டிருந்தன. ஒரு அம்மா ராமுவைப் பார்த்ததும் "என்ர பிள்ளை டொக்டராகி வந்திட்டான். என்னை இனிக் காப்பாத்துவான்" என்றார். உடனே ஒரு ஐயா ஓடி வந்து "மதன் வந்திட்டியோ" என்று ராமுவைப் பிடித்து உலுப்பினார். மதன் என்ற பெயரைக் கேட்டதும் ராமுவிற்கு பழைய ஞாபகங்கள் வந்தன. ராமுவும் அவர்களை நன்றாகப் பார்வையிட்டான். அவர்கள் வேறு யாருமில்லை மதனின் அம்மா, அப்பா எனத் தெரிந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமு ஒரு கணம் விறைத்துப் போனான். பார்வதியும், பாலசிங்கமும் ஏதோ புலம்பிக் கொண்டு இருந்தார்கள். ராமுவிற்கு நெஞ்சே வெடித்தது போலிருந்தது. அங்கே வேலை செய்யும் ஒரு ஊழியர் வந்து பார்வதியையும், பாலசிங்கத்தையும் உள்ளே கொண்டு போய் அடைத்தார். பாவம் அந்த இரண்டு ஜீவனும் "என்ர பிள்ளையோட கதைக்க விடுங்கோ" என கத்திக் கதறினார்கள். அந்த ஊழியர் வந்து ராமுவைப் பார்த்து "டொக்டர், இவைகளின்ர பிள்ளை போதைக்கு அடிமையாகி இறந்திட்டானாம். அவன் இவைகளுக்கு ஒரே பிள்ளையாம், அதில் இருந்து இவைக்குப் பைத்தியம் பிடிச்சு அயலவர்கள் தான் இங்க கொண்டு வந்தவை" என்று கூறிக் கொண்டே இன்னொரு பைத்தியத்தை (மனநோயாளி-யை) அழைக்கச் சென்றார்.

ராமுவிற்கு தான் அறியாத வயதில் செய்த தவறு இப்போது தான் புரிகிறது. உயிர் நண்பன் போல் மதனுடன் பழகி துரோகம் செய்தேனே என நினைத்து வருந்தினான்.

ராமுவிற்கு மன அழுத்தம் அதிகமாகியது. பல கோவில்களிற்குச் சென்றும் கூட அவன் மனதை சாந்தப்படுத்த முடியவில்லை. தான் செய்த பாவத்தைப் போக்க வேண்டும் என்றால் மதனை போன்று பார்வதியுடனும், பாலசிங்கத்துடனும் ஒவ்வொரு மாதமும் கதைக்க வேண்டும் என முடிவு செய்தான். இப்படியே ஒவ்வொரு மாதமும் அவர்களுடன் மதனைப் போன்றும் அவர்கள் தன் தாய் தந்தை என நினைத்தும் கதைக்கத் தொடங்கினான்.

**முற்றும்**

"அறியாத வயதில் செய்யும் பிழை
ஆபத்தை விளைவிக்கக் கூடியது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெழுகுவர்த்தி 7

மத்தியான வெயில் கொழுத்திக் கொண்டிருந்தது. மலர் காய்ந்த உடுப்புக்களை கொடியில் இருந்து எடுத்துக் கொண்டு உள்ளே போனாள். தந்தை சுந்தரம் வாசற்படி திண்ணையிலிருந்து கதை எழுதிக் கொண்டிருந்தார். தாயார் ஈஸ்வரி எரியாத அடுப்புடன் போராடிக் கொண்டிருந்தாள். மலரும் அடுத்துள்ள மூன்று தங்கைகளும் நடு வீட்டில் பல்லாங்குழி ஆடிக் கொண்டு இருந்தார்கள். ஒரு மூலையில் படுக்கையில் கிடந்த சுந்தரத்தின் தாய் கிழவி மரணத் தறுவாயிலும் புலம்பினாள். "இவ்வளவு புள்ளையள பெத்திட்டான் மூத்ததுக்கு நாற்பது வயசாகிடிச்சுது இன்னும் கல்யாணம் செய்யாமல் கதையளை எழுதி என்னத்த பிரயோசனம்" என்று கூறிக்கொண்டிருப்பது தான் தினமும் அவளின் வேலையாகிப் போனது. சுந்தரம் குடும்பத்தின் வயிற்றுப் பிழைப்புக்காகத் தான் கதை எழுதுகிறார். இதைக் கேட்ட மலரிற்கு அருவருப்பாய் இருந்தது. தன் வயதை தினமும் சொல்லி தான் ஒரு முதிர்கன்னி என்பதை குத்திக் காட்டுவதாக நினைத்தாள். சில சமயங்களில் கடவுள் தான் தஞ்சம் என்று மனம் வருந்தியும் உள்ளாள்.

சுந்தரம் கதை எழுதுவதை விட்டு உள்ளே வந்தார். கிழிந்த புடவையை தைத்துக் கொண்டிருந்த மலரைப் பார்த்தார். அவளின் முகத்தில் இருந்த சோகத்தை அவரால் புரிய முடிந்தது. சுந்தரத்திடம் தான் குடியிருக்கும் அந்தக் குடிசை வீட்டைத் தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் வேறு பணமோ, செல்வாக்கோ, வசதியோ எதுவுமே இல்லை. "ஒன்றும் இல்லாத நான் என் பிள்ளைகளை எப்படிக் கரை சேர்ப்பேன்" எனக் கலங்கினார்.

வெளியே சுந்தரமண்ணை எனக் கூப்பிட்ட குரல் கேட்டு எட்டிப் பார்த்தார். புறோக்கர் சிவனேசன் நின்றிருந்தார். சுந்தரம் கடவுளை வேண்டினார் இந்த முறையாவது சீதனம் கேட்காத வரன் வந்திருக்க வேண்டும். சிவனேசன் திண்ணையில் சுந்தரம் மறு பக்கத்தில் சென்று அமர்ந்தார். புறோக்கர் சிவனேசன் "உங்களிற்கு ஏற்ற மாதிரி ஒரு நல்ல வரன் அமைந்துள்ளது." என்றார். இதைக் கேட்ட ஈஸ்வரியும், பிள்ளைகளும் உள் வாசலில் நின்று எட்டிப் பார்த்தார்கள். சுந்தரத்தின் முகத்தில் மகிழ்ச்சி பொங்க "மலருக்கோ" என்றார். சிவனேசன் மாப்பிள்ளைக்கு 45 வயது. இவருக்கு ஏற்ற மாதிரி சீதனத்தோட எங்கயும் பொம்பிளை இல்லை. பணம் தர முடிந்தவர்களின் ஜாதகம் பொருந்தவில்லை. மாப்பிள்ளையின் தாய், தந்தை இவ்வளவு காலமும் பெண் தேடிப் பெண் கிடைக்கவில்லை. சீதனம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று விட்டார்கள். மலரின் ஜாதகம் மாப்பிள்ளை சரத்தின் ஜாதகத்துடன் பொருந்தியுள்ளது. நீங்கள் ஒப்புக் கொண்டால் சரத் இன்னும் இரண்டு கிழமையில் கனடாவிலிருந்து இலங்கை வர உள்ளார். அடுத்த முகூர்த்தத்தில் திருமணம் செய்யலாம். பிறகு மலர் கனடா போகலாம்.

மலரின் முகத்தில் புதிய மாற்றம் ஒன்று தென்பட்டது. உள்ளே படுத்திருந்த கிழவி எழும்பி இருந்து "இதிலை என்னத்தை யோசிக்கிறாய் சரி என்று சொல்லி விடு" என்றார். சுந்தரமும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டுவிட்டார். சரத்தின் தாய், தந்தை சரத்துடன் தொடர்பு கொண்டார்கள். "உனக்கு திருமணம் செய்து வைக்க முடிவு எடுத்துள்ளோம். நீ வரும் போது இங்கே உன்னை மணக்கோலத்தில் காண வேண்டும்" என்றார்கள். இதைக் கேட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரத் அதிர்ந்தான். "எனக்கு திருமணம் வேண்டாம்" என்று பெற்றோருடன் வாதிட்டான். அவர்கள் அவனின் கருத்தை ஏற்க மறுத்தனர். "திருமணம் செய்யாது இருந்தால் சந்ததி வளராது நீ கண்டிப்பாக திருமணம் செய்தாக வேண்டும்" என்றனர். சரத் பெற்றோரின் சொல்லைத் தட்ட முடியாது தவித்தான். உண்மைகளைப் பெற்றோரிடம் சொல்லவும் பயப்பட்டான். ஒரு முடிவுக்கு வந்தான் திருமணம் செய்வதாக ஒப்புக் கொண்டான். ஆனால் இப்போதைக்கு என்னால் இலங்கை வர முடியாது இங்கே எனக்கு வேலை அதிகம் லீவு கிடைக்கவில்லை என்றான். மனதில் கவலை கொண்ட சரத்தின் தாய், தந்தை நீ கனடாவை விட்டு வந்து விடு இங்கே திருமணம் செய்து இருந்து விடு என்றனர்.

சரத்திற்கு தலையே வெடித்தது. நான் வராவிட்டால் என்ன பெண்ணை இன்னும் இரண்டு மாதத்தில் அழைப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்றான். பெண்ணின் படத்தையும், பிறப்பு பதிவு போன்ற ஆவணங்களையும் அனுப்பவும் என்றான்.

சரத்தின் தாய் தந்தை மலர் வீட்டிற்கு சென்று சம்பந்தம் கலந்தனர். மலரிற்கு ஒரு சங்கிலியும், புடவையும் பரிசளித்தனர். மலரின் குடும்ப வறுமையை பார்த்து தங்கள் வீட்டில் வந்து இருக்குமாறு அழைத்தனர். சுந்தரம் அதை ஏற்க மறுத்தார். பெண்ணை சீதனமின்றி கொடுத்து விட்டு நாமும் வந்து இருப்பது நியாயமற்றது என்பதை சொன்னார். சரத்தின் தாய், தந்தைக்கு இந்தக் குடும்பத்தின் பெருந்தன்மை பிடித்துப் போனது. மலரின் பணிவும், அன்பான பேச்சும் அவர்களைக் கவர்ந்தது. மலரை மருமகளாக அல்ல மகளாகவே ஏற்று விட்டனர். சுந்தரத்திற்கும், ஈஸ்வரிக்கும் தன் மகளிற்கு பெரிய வாழ்வு வந்துவிட்டது என்ற மகிழ்ச்சி. அந்தக் குடும்பமே மலர் நல்லாய் வாழப் போறாள் என்று மகிழ்ந்தது. அந்த குடும்பத்தில் இதுதான் முதல் மகிழ்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் வெளி நாடு செல்வதற்கான ஆவணங்கள் எடுத்து அனுப்பப்பட்டன. மாமியாரால் வழங்கப்பட்ட புடவையையும், சங்கிலியையும் அணிந்து எடுத்த அழகிய புகைப்படமும் இணைத்து அனுப்பப்பட்டது, ஆவணங்கள் கனடாவிற்கு சென்று சேர்ந்தன. சரத் அதிலிருந்த மலரின் புகைப்படத்தை எடுத்துப் பார்த்தான். பின்னால் வந்து படத்தைப் பார்த்த வெள்ளைக்காரி ஆஷா ஆங்கிலத்தில் ஏதோ பேசினாள். அதுக்கு சரத்தும் ஆங்கிலத்தில் பதிலளித்தான்.

** ** ** **

மலர், மாலை தொடுத்துக் கொண்டிருந்தாள். வெளியில் தபாற்காரன் "மலரிற்கு கடிதம் வந்திருக்கு" என்றார். அந்த வீட்டிற்கு கடிதம் வந்தது கூட அன்றுதான் முதல்முறை என்று சொல்லலாம். மலரின் தங்கை ஓடிச் சென்று கடிதத்தை வாங்கினாள். கடிதத்தை பிரித்தாள் முழுவதும் ஆங்கிலத்திலிருந்தது மலர் உட்பட யாராலும் அதை வாசிக்க முடியவில்லை. பக்கத்தில் இருக்கிற கந்தசாமி சேரிட்ட மலர் ஓடிச் சென்றாள். கந்தசாமி சேர் அதை வாசித்து மலரிற்கு வாழ்த்து தெரிவித்தார். நீ வெளிநாடு செல்லப் போகிறாய் என்றார். வருகின்ற 12ஆம் திகதிக்கு ரிக்கற் போட்டிருக்கு நீ இனி கொழும்புக்கு போக சரியாக இருக்கும். இதைக் கேட்டதும் மலர் மகிழ்ச்சியில் ஆடினாள்.

சரத்தின் தாய், தந்தை தங்களுடைய செலவிலே மலரின் குடும்பத்தையும் கொழும்பிற்குக் கூட்டிச் சென்றனர். மலர் தாய் நாட்டையும், குடும்பத்தையும் பிரியும் வேதனையில் ஒரு துளி கண்ணீர் சிந்தினாள். மலர் பிரியும் சோகத்தோடு விமானத்தில் ஏறினாள். ஒன்பது மணித்தியாலப் பயணத்தில் விமானம் கனடாவில் தரையிறங்கியது. அங்கே யாரையும் அவளுக்கு தெரியவில்லை. எயர் போட்டில் ஒரு கூட்டம் சிலரின் பெயர்களை கையில் வைத்தபடி நின்றிருந்தது. அதற்கு நடுவில் மலர் என்ற பெயர் காணப்பட்டது. அவ்விடத்திற்கு மலர் சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைக் கண்டதும் சரத்திற்கு அடையாளம் காணமுடிந்தது. "ஆர் யு மலர்?" என்ற சரத்தின் கேள்வி மலரிற்கு புரியவில்லை. மலர் மெல்லிய குரலில் "நீங்கள் சரத்தா" என்று கேட்டாள். "ஓம்" என்று விட்டு கூட்டிச் சென்று ஒரு காரில் ஏற்றினான்.

கார் சென்று கொண்டே இருந்தது. கனடாவில் உள்ள வீதிகளை எல்லாம் புதுமையாகப் பார்த்தாள் மலர். கார் திடீரென ஒரு இடத்தில் நிறுத்தப்பட்டது. சரத் மலரைப் பார்த்தான். "உன்னிடம் ஒன்று சொல்லப் போகிறேன்" என்றான். மலர் விழித்தாள். சரத், "உன் குடும்பம் சரியான வறுமையானது தானே" என்றான். மலர் தலையசைத்தாள். "நான் சொல்கிறபடி நீ செய்தால் உன் குடும்பத்தை முன்னேற்ற முடியும்" என்றான். மலர் எதுவும் அறியாதவளாய் சரத்தைப் பார்த்தாள். சரத் சொன்னான் "எனக்கு ஆசா என்கிற வெள்ளைக்காரப் பெண் ஒருவருடன் திருமணம் நடந்து ஒரு குழந்தையும் உள்ளது" என்றான். மலரிற்கு இதயமே நின்றது போலிருந்தது. கல்யாணக் கனவுடன் வந்தவளிற்கு இப்படி ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது. முகமெல்லாம் வியர்க்க அறியாத பேதைப் பெண்ணாய் முழி பிதுங்க விழித்தாள்.

சரத் மெதுவாக சொன்னான் "உன்னை நான் இங்கே திருமணம் செய்யத்தான் கூப்பிட்டேன். ஆனால் நான் திருமணம் செய்ய மாட்டேன்" என்றான். மலரிற்கு தலை சுற்றுவது போலிருந்தது. சரத் சொன்னான் "ஆசாவிடம் உன்னை நான் வேலைக்காரியா இலங்கையில் இருந்து அழைக்கிறேன் என்று கூறி விட்டேன். நீயும் ஒப்புக்கொண்டால் மாதம் மாதம் உன் குடும்பத்திற்கு 50000 பணம் அனுப்பிக் கொண்டு இருப்பேன்" என்றான். மலரால் பேசக் கூடமுடியவில்லை. இது என்ன சோதனை என்று அழுதாள். ஒரு கணம் தன் குடும்ப நிலையை யோசித்தாள். எனக்கு வாழ்வு வந்ததாக மகிழ்ந்த குடும்பம் தான் திரும்பிச் சென்றால் என்னவாகும் என நினைத்தாள். சரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவிற்கு ஒப்புக் கொண்டு பணத்தை வீட்டிற்கு அனுப்ப முடிவெடுத்தாள். கார் அவ்விடத்தை விட்டு நகர்ந்து சரத் வீட்டு வாசலில் நிற்கிறது.

சரத்துடன் மலர் உள்ளே செல்கிறாள். ஆசா ஆங்கிலத்தில் ஏதேதோ சரத்துடன் கதைத்தாள். சரத் மலரைக் காட்டி "இவா தான் அந்த படத்தில் பார்த்த வேலைக்காரி" என்று ஆங்கிலத்தில் கூறினான். மலரிற்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் உடல் குளிரில் விறைத்தது. ஆசா மலரை ஒரு பெண்ணாகவே மதிக்கவில்லை. அவள் சென்ற அடுத்த கணமே முழு வேலைகளையும் மலரின் மேல் சுமத்தினாள். வீட்டில் மலர் மூத்த பிள்ளையாக இருந்தும் இவ்வளவு கஸ்டமான வேலைகளை செய்ததேயில்லை. குடும்பத்தை நினைத்தாள். தன் தங்கைகளாவது நல்லாய் இருக்கட்டும் என்று கஸ்டங்களை எல்லாம் அனுபவிக்கக் கற்றுக் கொண்டாள்.

காலம் உருண்டோடியது. சுந்தரத்தின் குடும்பம் பெண் நல்லாய் வாழ்கிறாள். மாதா மாதம் பணம் எல்லாம் அனுப்புகிறாள். அந்தப் பணத்தில் சுந்தரம் வீடும் கட்டத் தொடங்கினார். புதிய பொருட்கள் எல்லாம் வீட்டிற்கு வாங்கத் தொடங்கினார்கள். இவ்வளவு காலமாக மலர் அனுப்பிய பணத்தை சேமித்து சுந்தரம் இரண்டு பெண்ணிற்கும் திருமணமும் செய்து வைத்தார். கனடாவில் மலரின் துன்பம் தெரியாத சுந்தரத்தின் குடும்பம் சமூகத்தில் ஓரளவு வசதியான குடும்பம் என்ற பெயரைப் பெற்றது.

வருடங்கள் பல உருண்டோடின. கனடாவில் மலரால் வேலை செய்ய முடியாது உடல் நிலை சீரற்றுப் போனது. இருந்தும் ஆசா வேலைகளைக் கொடுத்துக் கொண்டே தான் இருந்தாள். ஆசாவின் குழந்தையைக் கூட மலர்தான் பராமரித்தாள். வேலை செய்ய முடியாத தருணத்தில் ஆசாவின் அடிகளையும் பல தடவை வாங்கியுள்ளாள்.

ஒருநாள் மலர் திடீரென மயக்க முற்றாள். சரத் மலரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலையில் அனுமதித்தான். அங்கே ஒரு தமிழ் டொக்டர் தான் மலரிற்கு வைத்தியம் செய்தார். மலரிடம் அவளின் நிலையைப் பற்றி டொக்டர் விசாரித்த போது டொக்டர் தமிழ் என்றதும் மலரின் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. மலர் தன் வாழ்வின் துயர்களை டொக்ரருடன் பகிர்ந்தாள். சரத் ஒரு பெண்ணின் வாழ்கையுடன் இப்படி விளையாடி விட்டானே என அதிர்ந்தார். மலரால் இனியும் கனடாவில் இருக்க முடியவில்லை. டொக்டரின் உதவியுடன் சரத்துக்குத் தெரியாமல் இலங்கை வந்து சேர்ந்தாள். இலங்கை வந்த மலரைக் கண்ட சுந்தரமும், ஈஸ்வரியும் தன் மகள் என அடையாளம் காண முடியாத அளவிற்கு மலர் மாறியிருந்தாள். இங்கிருந்து சென்றதை விடக் கேவலமான நிலையில் மலர் இருந்தாள். மலர் அம்மா, அப்பா என கட்டியணைத்த போதுதான் சுந்தரமும், ஈஸ்வரியும் தங்கள் பிள்ளை மலர் என தெரிந்தார்கள்.

மலரின் கண்களில் கண்ணீர் வந்தது. தன் வாழ்வில் நிகழ்ந்த கொடுமைகளை எல்லாம் சொல்லி அழுதாள். இதைக் கேட்டதும் சுந்தரத்துக்கும், ஈஸ்வரிக்கும் ஆறாத்துயராக இருந்தது. இவற்றை எல்லாம் அறிந்த சரத்தின் தாய், தந்தைக்கு சரத் இப்படி ஏமாற்றி விட்டானே என்று மனம் வருந்தினர். சரத்தின் மீது கோபம் கொண்டு சரத்தின் தொடர்பை துண்டித்து விட்டனர். மலரை தம் சொந்த மகளாக ஏற்றனர். தம் சொத்து முழுவதையும் மலரிற்கே எழுதி வைத்தார்கள். உலகறிய திருமணம் என்ற பெயரில் கனடா சென்ற மலர் இன்னும் முதிர் கன்னியாகவே புதிய வாழ்க்கையை புதிய தாய், தந்தையுடன் வாழத் தயாராகிறாள்.

"மெழுகுவர்த்தியாக தன்னை உருக்கிய மலர் தன்னைச் சுற்றி அடியில் உள்ள இருளை கவனித்திருந்தால் அந்த குடும்பம் ஒளி பெற்றிருக்க முடியாது. இப்படி பல மெழுகுவர்த்திகள் தம்மை உருக்கிக் கொண்டுதான் உள்ளன".

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை

# 8

மணி காலை 10 ஆகியது. மாணவர்கள் அங்குமிங்கும் ஓடித் திரிந்தார்கள். தரம் 10ற்கான பாடத் தெரிவுகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தன. சித்திரம், சங்கீதம், நடனம் எனும் மூன்று துறை ஆசிரியர்களும் இத் துறைகளில் எத் துறை விருப்பமோ அத் துறைக்கு வருமாறு அழைத்தனர். ஆதி தனக்கு சங்கீதம் விருப்பம் என்று ஓடிச் சென்று முதல் வரிசையில் நின்றான். எல்லாத் துறைகளிலும் மாணவர்கள் சமனாகச் சென்றிருந்தனர்.

சங்கீத ஆசிரியர் காமாட்சி ரீச்சர் தன் பிள்ளைகளை உள்ளே அழைத்துச் சென்றார். எல்லோரிற்கும் ஸ ரி க ம ப த நி ஸ / ஸ நி த ப ம க ரி ஸ என்ற ஸ்வர வரிசையை சொல்லிக் கொடுத்தார். ஒவ்வொரு வரிசையினரையும் பாட விட்டார். ஆதி அன்று தான் முதல் முறையாகச் சங்கீதம் படிப்பது. மிக அழகாக இராகத்துடன் ஸ்வர வரிசையைப் பாடினான். காமாட்சி ரீச்சர் வியந்தார். "இதற்கு முதல் சங்கீதம் கற்றிருக்கிறாயா" என வினவினார். ஆதி உடனே "இல்லை ரீச்சர் எனக்கு சங்கீதம் என்டால் விருப்பம் நான் நல்லாய் பாடுவன்" என்றான். காமாட்சி ரீச்சருக்கு ஆதி சங்கீதத்திலை A எடுப்பான் என்ற நம்பிக்கை வந்தது.

சங்கீத அறையை நோக்கி லட்சுமி ரீச்சர் ஓடி வந்தார். "எஸ்க்கியூஸ் மீ" என்று லட்சுமி ரீச்சர் உள்ளே சென்றார். காமாட்சி ரீச்சர் "ஒருக்கா ஆதியோட கதைக்கிறன்" என்றார். ஆதி எழும்பி "என்ன ரீச்சர்" என்றான். லட்சுமி ரீச்சர் கூறினார் "உன்ர அம்மா இப்ப ஆஸ்பத்திரியிலை இருந்து போன் எடுத்தவா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை வர்த்தகம், தமிழ் இலக்கியம், தொழில் நுட்பம் என்ற மூன்று பாடத்தையும் படிக்கட்டாம். சங்கீதம் படிக்கப் போறன் என்று நீ விடியக் கத்திக் கொண்டு இருந்தனியாம் உன்னை அதுக்கு விட வேண்டாமாம்" என்றார்.

காமாட்சி ரீச்சரிற்கு கவலையாக இருந்தது. லட்சுமி ரீச்சரைப் பார்த்து "ஆதி நல்லாய் பாடுவான், சங்கீதத்தில ஆர்வம் உள்ள பிள்ளையை படிக்க விட்டால் A எடுப்பான்" என்றார். லட்சுமி ரீச்சர் "ஆதியின் அம்மாவும், அப்பாவும் டொக்டர்கள். அவை பயப்படுகிறார்கள். சங்கீதம் படிக்க விட்டால் படிப்பை விட்டு விட்டால் என்ன செய்வது என்று யோசிக்கிறார்கள்."

ஆதி கண்களில் கண்ணீர் வழிய அழுது கொண்டே தன் தெரிவை மாற்றினான். வீடு செல்லும் வரை அவனின் கண்ணில் வந்த கண்ணீர் ஓயவில்லை. வீடு சென்ற ஆதி தான் சங்கீதம் படிக்கப் போவதாகத் தாயிடம் சண்டை போட்டான். தாயார் மாலதி, "நானும் உன் அப்பாவும் டொக்டர் நீயும் டொக்டராகத்தான் வரவேண்டும். இந்த சங்கீதத்தைப் படித்து ஒரு பிரயோசனமும் இல்லை." என்றார். "லட்சுமி ரீச்சரையும் கேட்டுத்தான் முடிவு எடுத்தனான். காமாட்சி ரீச்சர் சங்கீத வகுப்பு என்று மேலதிகமாக பாடசாலை முடிய எல்லாம் வைத்து படிப்பிக்கிறாவாம். அதுதான் இது உனக்குச் சரிவராது" என்று தாயார் சொன்னதும் ஆதியின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. கார் சத்தம் கேட்டு வாசலிற்கு சென்ற ஆதி தந்தையிடம் முறையிட்டான் எவ்வித பலனுமில்லை.

ஆதிக்கு சங்கீதத்திலை இருந்த விருப்பம் குறையவேயில்லை. காமாட்சி ரீச்சரின்ர வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போது சில சமயம் எட்டி நின்று பார்த்துக் கொண்டிருப்பான் . வீட்டில் தாய், தந்தை வேலைக்கு சென்ற வேளை ஆதி தன் பாட்டில் பல பாடல்களை இராகத்துடன் பாடிக் கொண்டிருப்பான். தன் திறமை தனக்குள்ளே முடங்கிப் போகிறது என வருந்தினான். சில சமயம் காமாட்சி ரீச்சரிட்டை சொல்லி அழுதும் உள்ளான். காமாட்சி ரீச்சரிற்கு மன வருத்தமாக இருந்தது. ஆனால் அவவால் எந்த உதவியும் ஆதிக்கு செய்ய முடியாமலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் தமிழ் விழா இடம் பெற ஆயத்தமானது. தனிப் பாடல் போட்டிக்கு மாணவர்கள் எடுக்கப்பட்டார்கள். ஆதி தன் பெயரையும் கொடுத்தான். போட்டியில் ஆதி முதலிடத்தைப் பெற்றான். முதலிடம் பெற்ற ஆதி தமிழ் விழாவில் அந்தப் பாடலைப் பாடினான். காமாட்சி ரீச்சரிற்கு வியப்பாக இருந்தது. சங்கீதம் படித்தவர்களால் கூட இவ்வளவு இராகமாக பாட முடியாது என்று நினைத்தார். நிகழ்ச்சியிலிருந்த லட்சுமி ரீச்சர் ஆதியின் தாய் மாலதிக்கு போன் எடுத்தார். "ஆதி இங்க சங்கீதம் என்று எல்லாம் படிச்சு படிப்பை வீணாக்குகின்றான்" என்றார். மாலதி "இல்லை ரீச்சர் நான் ஆதியை படிக்க வேண்டாம் என்றனான். அவன் படிக்க மாட்டான்" என்றார். "நான் ஆதி வீட்டை வரும்போது கதைக்கிறன் ரீச்சர்" என்று விட்டு போனை வைத்து விட்டார்.

ஆதிக்கு பல வரவேற்புக்கள் கிடைத்தன. அதிபர் பாடல் நல்லதாய் இருந்தது எனப் பாராட்டினார்.

தமிழ் விழாவில் தன் பாட்டிற்கு கிடைத்த வரவேற்புக்களை நினைத்து மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்தான். இதை தன் தாய்க்கும், தந்தைக்கும் சொல்லிப் பெருமைப்பட நினைத்தான். முன்னே இருந்த சோபாவில் அம்மாவும், அப்பாவும் இருப்பதைக் கண்டு ஆதி ஓடிவந்தான். ஆதியைக் கண்டதும் மாலதி "இன்றைக்கு ஏன் சங்கீதப் பாடல் படித்தாய். உன்னை படிக்கக் கூடாது என்றுதானே சொன்னேன்" எனக் கத்தினாள். மகிழ்வுடன் ஓடி வந்த ஆதியின் முகம் சோர்ந்து போனது. கண்ணில் நீர் பெருக தன் அறைக்குச் சென்றான். கட்டிலில் படுத்திருந்து தலையணை தோயும் வரை அழுதான். அந்த வீட்டில் ஆதி டொக்டராக வேண்டும் என்பது தான் கட்டாய நியதியாக இருந்தது. ஆதியின் விருப்பம் அங்கே எடுபடவேயில்லை.

இந்திய தொலைக்காட்சி விஜய் ரீவி நடாத்தும் விசேட பாட்டுக் கச்சேரி இலங்கையில் ஆதியின் வீட்டிற்கு அருகில் நடந்தது. தாயும், தந்தையும் வைத்தியசாலைக்கு சென்றுவிட்டதன் பின் ஆதி அந்தப் பாட்டுக் கச்சேரிக்குச் சென்றான். அங்கே பாடல்களைக் கேட்டு இரசித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தான். அங்கே பாடுவதற்கு பாடகர்களை மக்கள் மத்தியில் இருந்து அழைத்தார்கள். சிறந்த பாடகருக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசு என அறிவிக்கப்பட்டது. ஆதிக்கு தானும் பாடுவதற்கு ஆசை ஏற்பட்டது. இந் நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பாக தொலைக்காட்சிகளில் இடம் பெற்றுக் கொண்டு இருந்தது. ஆதியின் தாயும், தந்தையும் வைத்தியசாலையில் இருந்து இந் நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆதி தானும் ஒருவனாக அந்தக் குழுவில் இணைந்து பாடத் தொடங்கினான். பாடல் சிறந்த இராகத்துடன் பாடப்பட்டது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆதியின் தாய்க்கும், தந்தைக்கும் பேரதிர்ச்சியாக இருந்தது. "எங்கள் பிள்ளை இவ்வளவு திறமையானவனா" என வியந்தார்கள். "ஆதியின் திறமையை லட்சுமி ரீச்சரின் கதையை கேட்டு மழுங்கடித்து விட்டேனே" என்று மாலதி வருந்தினாள்.

"பிள்ளை விரும்பிய பாடத்தைப் படிக்க விடாமல் அவனைக் கஸ்டப்படுத்தி விட்டோமே" என இருவரும் கவலைப்பட்டார்கள். இந்தப் போட்டியின் இறுதியில் ஆதி வெற்றியாளனாக தீர்மானிக்கப்பட்டான். ஆதிக்கு ஒரு லட்சம் பரிசும் கிடைத்தது. போட்டி நடைபெற்ற இடத்திற்கே ஆதியின் தாயும், தந்தையும் வந்து ஆதியை "நீ விரும்பிய பாடத்தையே படிக்கலாம்"எனக் கண் கலங்கினார்கள். "தவறான எண்ணத்தினால் உன்னை சங்கீதம் படிக்கக் கூடாது எனக் கண்டித்தேன்" என்று மாலதி கலங்கினார். இந் நிகழ்வு விஜய் ரீவி யால் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. நிகழ்ச்சி முடிவில் பிள்ளை விரும்பிய பாடத்தை கற்க விடுதல் சிறந்தது என்ற கூற்றும் இடம் பெற்றது. அதே மகிழ்வுடன் காமாட்சி ரீச்சரை காணச் செல்கிறான் ஆதி.

**முற்றும்.**

"ஆசிரியர்கள் பிள்ளைகளிற்கு சிறந்த வழிகாட்டிகளாக அமைய வேண்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூண்டுக் கிளி 9

மகேஸ் சுற்றும் முற்றும் பார்த்தான் பிரணிதாவை இன்னும் காணவில்லை. மகேஸ் முகத்தில் சோகம் படர்ந்தது. "கண்டிப்பாக வருவேன்" என்றவளை காணாது வருந்தினான். மைதானம் எங்கும் பார்வையாளர்கள் சுற்றி நின்றார்கள். மகேஸ் களத்தில் இறங்க ஆயத்தமானான். 5 நிமிடத்தில் ஓட்டப் பந்தயம் தொடங்கியது. மகேஸ் ஓட ஆரம்பித்தான். அவனால் பிரணிதாவைப் பார்க்காமல் ஓட முடியவில்லை. அவனது வேகம் குறைந்து கொண்டே சென்றது. அந்த வேளை அன்ரனி மகேசை முந்திக் கொண்டு வேகமாக ஓடினான். பார்வையாளரின் நடுவிலிருந்து "மகேஸ் ஓடு! மகேஸ் ஓடு" என்ற உற்சாக மூட்டும் சத்தம் ஓங்கி ஒலித்தது. அச் சத்தம் ஒலித்துக் கொண்டே இருந்தது. மகேஸ் அது பிரணிதாவின் குரல் தான் என்று புரிந்து கொண்டான். குரல் கேட்ட மகேஸ் தனது வேகத்தைக் கூட்டி போட்டியில் முதலிடத்தைப் பெற்றான். அன்ரனிக்கு கோபம் பொங்கியது. "மகேஸ் தோற்க வேண்டும் என்று நினைத்தேன் ஆனால் வென்று விட்டான். பிரணிதாவை கடத்தி வைத்தேன் இங்கே எப்படி வந்தாள்" என்று குழம்பினான்.

அன்ரனியின் முன் வந்த மகேஸ் "பந்தயத்தில் நான் வென்று விட்டேன் இனிமேல் நீ பிரணிதாவை தொந்தரவு செய்யக் கூடாது" எனக் கண்டித்தான். கோபம் கொண்ட அன்ரனி வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியின்றி அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். மகேஸ் பிரணிதாவை தேடினான். முன் ஓடி வந்த பிரணிதா கையில் பெரிய காயத்துடன் நின்றாள். காயத்தைப் பார்த்த மகேஸ் துடித்தான். பிரணிதாவின் கண்ணில் கண்ணீர் வந்தது. " எனக்காக அன்ரனியுடன் போட்டியிட்டு முதலிடம் பெற்று விட்டாய் வாழ்த்துக்கள்" எனக் கூறிப் பொருமினாள். மகேசின் கவனம் அவளது பேச்சில் செல்லவில்லை மாறாக அவள் கையில் உள்ள காயத்தில் சென்றது.

"உன் கையில் என்ன தழும்புக் காயம்?" என்று பதறினான். பிரணிதா அழுதபடி கூறினாள் "தானே போட்டியில் முதலிடம் பெறுவேன் என்றும் அதன்பின் நீ என்னுடன் கதைக்க வேண்டுமேயல்லாது மகேசுடன் கதைக்கக் கூடாதென மிரட்டினான். அதற்காக பந்தயம் வைத்தான் நீயும் நம் காதலுக்காக அதனை சவாலாக ஏற்றுக் கொண்டாய். ஆனால் அன்ரனிக்கு நீ என்னைக் காணாமல் எந்த ஓட்டப் பந்தயத்திலும் ஓடமாட்டாய் என நன்கு தெரியும். அவன் சதி செய்து வெல்ல முயன்றான்.

நான் வந்து கொண்டிருந்த வழியில் என்னைக் கடத்தி கயிற்றால் கட்டி இருவர் பாதுகாப்பில் வைத்திருந்தான். நேரமாகியது என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. எப்படியாவது ஓட்டப் பந்தய இடத்திற்கு செல்ல வேண்டுமென பிரார்த்தித்தேன். அந்த இருவரும் நான் ஓடமாட்டேன் என தூங்கிவிட்டார்கள். நான் அந்த கயிற்றை இழுத்துக் கழற்றியதில் காயம் ஏற்பட்டது" என்றாள். இதைக் கேட்ட மகேசின் கண்ணில் கண்ணீர் வந்தது. தன் மீது பிரணிதா வைத்திருக்கும் அன்பையும், தனக்காக அவள் படும் கஸ்டத்தையும் நினைத்து பெருமிதமடைந்தான். அவர்கள் இருவரும் தம் தூய அன்புக்கிடையில் இவ் உலகில் எதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடு இணையில்லை என எண்ணிக்கொண்டார்கள். இருந்தும் அவர்களுக்குத் தடையாக மதம் காணப்பட்டது. மகேஸ் இந்து மதத்தைச் சேர்ந்தவன். பிரணிதா பரம்பரையாக கிறிஸ்தவ வழியில் தோன்றியவள். அவர்கள் மதம் தமக்கு ஒரு தடை என எண்ணவில்லை. குடும்பம் தங்கள் காதலை ஏற்குமா என்று அறிந்திருக்கவில்லை.

பிரணிதா குடும்பத்தில் செல்லமாக வாழ்ந்தவள். மூன்று அண்ணணிற்கு ஒரு செல்லத் தங்கையாகவும், ஒரு தங்கைக்கு பாசமான அக்காவாகவும் இருந்தாள். பிரணிதாவிற்கு அப்பா இல்லை அம்மா மட்டும்தான்.

மகேசோ அப்படியல்ல மூன்று தங்கைகளிற்கு பொறுப்பு மிக்க அண்ணனாக காணப்பட்டான். அப்பா ஒரு கோயில் பூசாரியாக உள்ளார்.

காலம் உருண்டோடியது. அவர்களின் காதல் வளர்ந்து கொண்டே சென்றது. இக் காதலை சமூகமோ, குடும்பமோ ஏற்காது என்ற நிலையை அவர்களால் ஏற்க முடியாதிருந்தது. வகுப்பு நேரங்களில் பார்வைகளிலும், கடிதங்களிலும் பரிமாறிய காதல் இப்போது வெளி இடங்களில் சந்திக்கும் அளவில் வளர்ந்து விட்டதது.

பிரணிதாவின் அண்ணா சுலக்ஸ் இவர்கள் சந்தித்த வேளை கண்டு விட்டார். பிரணிதாவின் வீட்டில் பூகம்பம் வெடித்தது. "மகேஸ் எனது நண்பன் அதனால் தான் கதைத்தேன்" என்று பிரணிதா கூறினாள். அவளின் சொல்லை அந்தக் குடும்பத்தார் நம்பினார்கள். "உன்னை நம்புகிறேன்" என பிரணிதாவின் அம்மா கூறிய வார்த்தையில் துடித்துப் போனாள். ஒரு கணம் தன் குடும்பம் தன் மீது வைத்த நம்பிக்கையை வீணாக்குகிறேனே என நினைத்தாள். மகேசையும் கை விட முடியாது தவித்தாள். மகேஸ் தனக்காக உயிரையும் கொடுக்க கூடியவன், தான் இல்லாவிட்டால் அவனின் நிலை என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என யோசித்தாள். மனம் நிறைய பாரத்துடன்வெளியில் செல்ல வெளிக்கிட்ட பிரணிதாவை அவளது அண்ணன் தடுத்தான். "இனிமேல் உன்னை எங்கு வேண்டுமானாலும் நானே கூட்டிச் செல்வேன். இனிமேல் நீ வகுப்புக்களுக்கும் செல்லத் தேவையில்லை. உனக்கு திருமணம் செய்து வைப்பதாக அம்மா முடிவெடுத்து விட்டார்" என்றான். இதைக் கேட்ட பிரணிதாவிற்கு உலகமே சுழன்றது. "நான் படிக்க வேண்டும்" என அழுதாள். அவளது அழுகைக்கு எது வித பயனும் விளையவில்லை.

பிரணிதா கூண்டுக் கிளியாக வீட்டுக்குள் அடைபட்டாள். அவளது சோகத்தை தலையணை மட்டுமே அறிந்திருக்கும். பிரணிதாவை காணாது மகேஸ் துடித்தான். வகுப்புக்களிற்கு அவள் வராதது அவன் மனதில் கலக்கத்தை உண்டாக்கியது. அவளுக்கு ஏதும் வருத்தமோ என்று புழுவாய் துடித்தே போனான். அவளைச் சந்திக்க முடியாது தவித்தான். அவளைக் காண மனம் துடித்தது.

பிரணிதாவைக் காணாது ஒரு கிழமையாகிப் போனது. மகேஸ் எந்த வேலையும் செய்ய முடியாது குழம்பினான். சிந்தனை முழுவதும் பிரணிதாவைப் பற்றியே சென்றது. மகேசுக்கு வாழ்க்கையே வெறுத்தது போலிருந்தது. ஒரு தடவை அவள் முகம் காண விரும்பினான். பிரணிதா தன் வாழ்கையில் என்ன நடக்கப் போகிறது என வாடினாள். மகேசின் நிலை என்ன ஆகியதோ என நினைத்து நினைத்து அழுவதே தினமும் அவளின் வேலை ஆகிப் போனது. குடும்பமே பிரணிதா முன் ஒன்று சேர்ந்தது. "உனக்கு திருமணம் செய்ய தீர்மானம் எடுத்து விட்டோம். மாப்பிளை கூடப் பார்த்து விட்டோம்." அம்மாவின் இந்த வார்த்தையைக் கேட்ட பிரணிதா தவித்தாள். அவளுக்கு இதயமே வெடித்தால் என்ன என்பது போலிருந்தது. அண்ணன் சுலெக்ஸ் "இந்த திருமணத்திற்கு நீ ஒப்புக் கொள்ளாவிடில் எங்கள் குடும்ப மானமே போய் விடும்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு கீழே உள்ள உன் தங்கையின் வாழ்க்கை பாழாகிவிடும் என்றார்கள். பிரணிதா செய்வதறியாது உள்ளுக்குள்ளே அழுது கொண்டிருந்தாள். தன் காதலை இவர்களிடம் சொல்ல எண்ணிய போது ஏற்க மாட்டார்கள் என்ற எண்ணம் அவளைத் தடுத்தது.

ஒரு இந்துவை எங்கள் வீட்டில் வேலைக்கு கூட சேர்க்க மாட்டார்கள். திருமணம் என்றால் என்ன நடக்கும் என கண்ணில் நீர் பெருக அழுதாள். குடும்பத்தை யோசிப்பதா? காதலை ஏற்பதா? என்ற இக்கட்டான சூழ்நிலையில் தவித்துக் கொண்டிருந்தாள். மகேசின் வீட்டில் கூட எங்கள் காதலை ஏற்க மாட்டார்கள் என ஒரு கணம் யோசித்தாள். பிரணிதா தாயிடம் உங்கள் விருப்பம் எதுவோ அதை செய்யுங்கள் என்றாள்.

பிரணிதா தன் நண்பியின் உதவியுடன் மகேசிடம் தன் சூழ்நிலையை தெரிவித்தாள். மகேசுக்கு வாழ்க்கையே வெறுப்பது போலிருந்தது. தன் காதல் மண்ணால் கட்டிய வீடு போலாகி விட்டதே என வருந்தினான். ஒரு கணம் தன் குடும்பம், தன் மூன்று தங்கைகள், தான் ஒரு ஐயர் என்பதை எண்ணினான். பிரணிதா எந்த முடிவெடுத்தாலும் தனக்கும் சாதகமாய் தான் எடுப்பாள் என நினைத்தான். வாழ்க்கையில் காதல் மட்டுமே இல்லை என அறிந்தான். அம்மா, அப்பா, தங்கை என ஒரு சமூகமே இருப்பதை அறிந்தான். முதல் காதலை மறக்காதுதன் குடும்பத்திற்காய் வாழ ஆரம்பித்தான்.

மனதில் முதல் காதலை சுமந்தபடி இன்னொருவனின் கரம் பிடித்தாள் பிரணிதா.

**முற்றும்**

"கூண்டில் அடைபட்ட கிளி போல முதல் காதலை சுமக்கிறாள் பிரணிதா".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைந்தது 10

அன்றும் வழமை போல் காலை எட்டு மணியைத் தாண்டியதும் நிறுவனத்தினுள் சத்தங்கள், சலனங்கள், பதற்றங்கள் போன்றவற்றை சுமந்தவாறு மாலதி ரான்ஸ்போட் நிறுவனம் தென்பட்டது. அன்று அனைவருக்கும் போனஸ் வந்ததை எண்ணி எல்லோர் மனதிலும் மகிழ்ச்சி பொங்கி ஆடியது. வழமை போல் சிவா பிரியாவை அவதானித்தான். அவள் இயல்பு போல் நிசப்பதமாகவே தன் வேலைகளை செய்து கொண்டிருந்தாள். போனஸ் வந்த மகிழ்ச்சி கூட அவள் முகத்தில் தென்படவில்லை. சிவா தன்னை திருமணம் செய்யுமாறு பிரியாவிடம் கேட்டு கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. அவள் இன்னும் எதுவித பதிலும் தெரிவிக்கவில்லை. அதன் பிறகு சிவாவும் அவளை தொந்தரவு செய்ததாக இருக்கவில்லை.

பிரியா தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் மட்டுமே ஏனையோருடன் கதைப்பாள். அவள் ஒரு அழகிய தேவதை என்று கூட கூறலாம். மெல்லிய நிறத்தில் தான் சேலை அணிவாள், நெற்றியில் ஒரு பொட்டுக் கூட வைக்கமாட்டாள். இருந்தும் அவளது அழகில் ஒரு வித குறையுமிருக்கவில்லை. ஏனோ அவளின் மனம் மட்டும் நிசப்தமாகவே காணப்பட்டது. அவள் எந்த ஊழியருடனும் அதிகம் பேசமாட்டாள். இந்த கொடூர உல-கில் இதனால் தான் ஏனோ அவள் தப்பிப் பிழைத்து வாழ்கிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூடக் கூறலாம். வீட்டிற்குச் சென்றால் தந்தையின் கொடுமை, வேலை செய்யும் இடத்தில் தான் சற்று அமைதியாகவும், மனமகிழ்வுடனும் இருக்கிறாள். வீட்டிற்கு சற்று நேரம் பிந்திச் சென்றால் தந்தையின் கதைகளிற்கும் கொடூரத் தாக்குதலான கேள்விகளிற்கும் அவளால் பதில் கூறவே முடியாது.

பிரியா அன்று வேலையின்றி சற்று ஓய்வாக இருந்த வேளை அவளைப் பழைய நினைவு மீட்டத் தொடங்கியது. மூன்று வருடங்களின் முன் தன் தாயார் ஒரு மணாளனிற்கு தன் கரம் பிடித்து மகிழ்வுடன் வாழ ஆசீர்வதித்தாள். விதி செய்த கோலம் அவன் பாம்பு தீண்டி அன்று இரவே உயிர் நீத்து விட்டான். தன் மகள் இருபத்துநான்கு வயதிலே திருமணமான அன்றே விதவைக் கோலத்தை தரித்தாளே என்று எண்ணி எண்ணியே தாயார் உயிர் நீத்து விட்டாள். தாய் இறந்த பின்னர் தந்தை பிரியாவை தனக்கு பணம் சம்பாதித்து தரும் இயந்திரமாகவே பாவித்தார். அவர் பிரியாவின் எதிர்காலம் நோக்கி சிந்தித்ததே கிடையாது. சக ஊழியர் ஒருவரின் குரல் கேட்டு பிரியா திடுக்கிட்டாள். அவளின் கண்களில் கண்ணீர் தாரையாக ஊற்றெடுத்திருந்தது. கண்களைத் துடைத்து மீண்டும் வேலையில் சிந்தனையை ஆழ்த்தினாள்.

மதி மயங்கும் மாலை வேளையில் பிரியா பஸ் தரிப்பிடத்தில் தனியாக நின்று கொண்டிருந்தாள். சிவா-வின் கண்களில் அவள் தென்பட்டாள். சிவா பிரியாவிடம் "பஸ்சை தவற விட்டீர்களா?" என்று விசாரித்துக் கொண்டிருந்த வேளை கூட பிரியா "பஸ் இன்று வரவில்லை" என்று கூறி அவ் விடத்தை விட்டு நகர்ந்தாள். என்ன ஒரு கெடு காலமோ பிரியாவின் தந்தை இந் நிகழ்வைக் கண்டுவிட்டார்.

அன்று இரவு 10 மணி அளவில் பிரியாவின் தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு வந்து குடிமயக்கத்தில் "நீ ஒரு விதவை போல் நடந்து கொள்ளவில்லை, உன் கணவன் இறந்ததை எண்ணி மனம் வருந்தாது வீதிகளில் ஏனைய ஆண்களுடன் கதைத்து மானத்தை வாங்குகிறாய்" என்று கத்தினார்.

பிரியா தன் தாயின் படத்தைப் பார்த்து மனதிற்குள் அழுது கொண்டிருந்தாள். தந்தை "உனக்கு திருமணம் செய்து கொடுப்பதாக முடிவு செய்து விட்டேன்," என்றார். பிரியா அதிர்ந்தாள். "மாப்பிள்ளை வீட்டாருக்கு உன்னைப் பிடித்து விட்டது, உனக்கு அவர்களைப் பிடிக்க வேண்டிய அவசியமில்லை. மாப்பிள்ளை வீட்டார் எனக்கு ஒரு வீடும் மாதா மாதம் பத்தாயிரம் ரூபா பணமும் தருவதாகக் கூறிவிட்டனர். நீ அவனை திருமணம் செய். அது மட்டும்போதும்" என்று கூறி போதை மயக்கத்தில் உளறிக் கொண்டே தூங்கிவிட்டார். அன்று இரவு பிரியா தந்தையின் பையிலிருந்து ஒரு விலாசம் எடுத்தாள். அது மாப்பிள்ளை வீட்டாரின் விலாசம் என உணர்ந்தாள். மாப்பிள்ளை வீட்டாரை தான் சந்திக்க எண்ணினாள்.

வழமை போல் வீட்டின் கொடூரத்திலிருந்து விலகி பிரியா நிறுவனத்திற்கு சென்றாள். அன்று, ஒரு நாள் லீவு கொடுத்து விட்டு அந்த மாப்பிள்ளை வீட்டாரின் விலாசத்தை வாசித்து அந்த வீட்டு வாசலை அடைந்தாள். கிரனைற் கற்கள் வாசல் எங்கும் பதிக்கப்பட்டிருந்தது. வீடு மாளிகையாக பளபளத்துக் கொண்டிருந்தது. உள்ளே நுழைந்தாள். ஒரு வயோதிபர் "யாரம்மா நீ" என்றார். "நான் பிரியா" என்று கூறிய போது அந்த வயோதிபர் "ஆமாம் உன் அப்பா எல்லாம் கூறியுள்ளார். நீ இந்த திருமணத்திற்கு சம்மதித்ததே பெரிய விடயம் ரொம்ப நன்றி" என்றார். பிரியாவிற்கு எதுவும் புரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் உங்க பிள்ளையை சந்திக்கலாமா?" என்று கேட்டாள். வயோதிபர் "அந்த அறையில் தான் இருக்கிறார் போய்ப் பார்" என்றார்.

பிரியா மெதுவாக அறையை அடைந்து கதவைத் திறந்தாள், பலத்த சத்தத்துடன் கத்திக் கொண்டு ஓடி வந்தாள். உள்ளே 45 வயது மதிக்கத்தக்க ஒருவர் பைத்தியம் பிடித்த நிலையில் உடலெங்கும் சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் கத்திக் கொண்டு இருந்தார். பிரியா அழுது கொண்டே அவ் வீட்டை விட்டு வெளியேறி மீண்டும் நிறுவனத்தை அடைந்தாள். அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. பணத்திற்காக பெத்த மகளையே விற்கிறார் என நினைத்த போது தந்தை மீது வெறுப்பும் விரக்தியும் ஏற்பட்டது. தந்தையின் இவ்வாறான செய்கைகளுடனும், கேவலமான பேச்சுக்களுடனும் பணம் சம்பாதிக்கும் இயந்திரமாக வீட்டிலிருப்பதை விட சிவாவை திருமணம் செய்தால் என்ன என்று நினைத்தாள். அவள் மனதில் தான் ஒரு விதவை என்பதை உணர்ந்த போது அவளது ஆசைகளை அலை வந்து அடித்துக் கொண்டு போனது போலிருந்தது.

** ** ** **

சிவாவின் வீட்டில் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பித்தன. சிவா இன்று முடிவு எடுத்தாக வேண்டும் என நிறுவனத்திற்கு வந்தான். நிறுவனத்தின் நடுவிலே எல்லோர் முன்னிலையிலும் பிரியாவின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அன்று நேரம் சென்று கொண்டே இருந்தது பிரியா வரவில்லை. நேரம் பத்தை தாண்டியது சிவாவால் பொறுமை காக்க முடியவில்லை. பிரியாவின் வீட்டிற்குச் சென்று கேட்கலாம் என சில நண்பர்களையும் கூட்டிக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றான் வழியில் புகையிரதப்பாதையில் பிரியா தனது சாவை எதிர்நோக்கி புகையிரத வரவுக்காய் காத்துக் கொண்டிருந்தாள். புகையிரதம் அவளை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தவேளை பிரியாவின் நண்பி லீலா ஓடிச் சென்று பிரியாவைக் காப்பாற்றிவிட்டாள். சிவா அந்த இடத்தை அடைந்து "ஏன் இந்த முடிவு" என எரிச்சலாக கேட்டான். "இப்போதாவது உன் வாழ்க்கையில் உள்ள உண்மைகளை உடைத்துவிடு எத்தனை நாள் தான் மௌனமாக இருக்கப்போகிறாய்" என்றாள் லீலா. பிரியாவின் கண்களில் கண்ணீர் பெருகியது. அங்கே மௌனம் கலைந்தது, "நான் ஒரு விதவை" என ஊரறிய கத்தி அழுதாள். சிவா உட்பட அங்கே இருந்த நண்பர்கள் அனைவரும் அதிர்ந்தார்கள். அன்றுதான் அவர்களுக்கு இந்த உண்மை தெரிந்தது. லீலா அவளின் வாழ்க்கையில் நடந்த கொடுமைகளைக் கூறினாள். சிவா அந்த நேரம் அவளை மனதோடு ஏற்றான். அவர்கள் புதிய பறவைகளாய் வாழ்க்கை எனும் உலகில் பயணிக்கத் தொடங்கினார்கள்.

**முற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயம்வரம் 11

மழை கொட்டிக் கொண்டிருந்தது. சிவராம் கலண்டரைக் கிழித்தார். ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி காணப்பட்டது. சிவராமின் கண்ணில் தன் திருமணம் படமாக ஓடிக் கொண்டிருந்தது. பல்லி கத்திய சத்தத்தில் நன்மைக்கே என்ற நினைவால் அருகிலிருந்த சோபாவில் அமர்ந்தார். தன் திருமணம் முடிந்து ஒரு வருடமாகியதை எண்ணினார். தான் ஆசையாய் செய்த திருமணம் கசந்து போனதை நினைத்து வருந்தினார். சுவரில் தொங்கிய தம் திருமணப் படத்தை சிவராம் பார்த்தார். படத்திலிருந்த சுவேதாவைப் பார்த்த சிவராமிற்கு பழைய நினைவு மீட்டத் தொடங்கியது.

சிவராம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிறார். மாதம் 25000 ரூபா சம்பளத்துக்கே வேலை செய்கிறார். திருமணத்துக்கு முன் தன் தாய்க்கும், தனக்கும் அந்த சம்பளம் போதுமானதாக காணப்பட்டது. தாய் சிவகாமியின் வலுக்கட்டாயத்திற்கேற்ப சிவராம் திருமணம் செய்ய ஒப்புக் கொண்டான். தனக்கு "அழகிய பெண்ணையே திருமணம் செய்து தரவேண்டும்" என்று தாயிடம் கூறினான். சிவகாமி எத்தனையோ பெண்ணின் புகைப்படங்களைக் காட்டியும் யாரையும் சிவராமிற்குப் பிடிக்கவில்லை. இந்த நேரம் சுவேதாவின் படம் புரோக்கர் மூலமாக சிவராம் வீட்டிற்கு வந்தது. சிவராமிற்கு சுவேதாவை படத்தில் பார்த்தவுடனேயே பிடித்து விட்டது. சிவராமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாதகமும் சுவேதாவின் ஜாதகத்துடன் பொருந்தியிருந்தது.

சுவேதா தன் அழகு கெட்டுவிடும் என தன் இரு தங்கைகளும் திருமணம் செய்த பின்பும், தான் திருமணம் செய்யாதிருந்தாள். சுவேதா தன் தாயின் நச்சரிப்பினால் சிவராமை திருமணம் செய்ய ஒப்புக் கொண்டாள். சுவேதா தன் வீட்டில் தன் நேரம் முழுவதையும் தன்னை அழகுபடுத்துவதிலே செலவழித்தாள்.

சிவராம் திருமணக் கனவில் மிதந்து கொண்டிருந்தான். அடுத்த முகூர்த்தத்தில் சிவராமிற்கும், சுவேதாவிற்கும் திருமணம் நடந்தது. சிவராமிற்கும், சுவேதாவிற்கும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் பொங்கி வழிந்தன.

திருமணநாள் சிவராம் குதூகலித்துக் கொண்டிருந்தான். தன் வாழ்க்கையில் வசந்தம் வந்ததாக எண்ணினான். அன்று இரவே சிவராமின் கனவு பாழாகியது. சுவேதா சிவராமைப் பார்த்து "எனக்கு இப்போதைக்கு குழந்தை வேண்டாம்." என்று கூறியவள் சிறிது நிறுத்தி "குழந்தை பெற்றால் என் அழகு கெட்டுவிடும்" என்று முடித்தாள். வசந்தம் வந்ததாக எண்ணிய சிவராமின் வாழ்க்கையில் இடியே விழுந்தது. சிவராம் அதிர்ந்து போனான். திருமண வாழ்க்கையில் தன் பெயர் சொல்ல ஒரு பிள்ளை வேண்டாம் என்கிறாளே என்று நினைத்தான். சுவேதாவைக் காணாது திரும்பிப் பார்த்தவன் கண்ணாடி முன் நின்று ஏதோ கிரீம்களை எல்லாம் பூசிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

காலம் உருண்டோடியது. சுவேதாவில் எது வித மாற்றமும் ஏற்படவில்லை. வீட்டு வேலைகளோ, சமையலோ எதுவுமே சுவேதா செய்வதில்லை. வீட்டில் அனைத்து வேலை-களையும் சிவராமின் தாயார் சிவகாமியே செய்தார். சிவகாமி மருமகள் வந்தால் தான் ஓய்வடையலாம் என நினைத்திருந்தார். ஆனால் இங்கே மருமகள் தனக்குஎதுவித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதையும் தரவில்லை என வருந்தினார். தன் மகன் சந்தோசமாகத்தான் உள்ளான் என நினைத்து இவற்றைப் பொறுத்துக் கொண்டார். சுவேதா முக அழகுக் கிரீம்கள் என சிவராமின் பணத்தை வீணாக்கிக் கொண்டிருந்தாள். சிவராமால் எதுவும் செய்ய முடியவில்லை. பணம் கொடுக்கவில்லை என்றால் சண்டைபிடிக்கத் தொடங்கினாள்.

சிவராமிற்கு கணவன் என்ற மதிப்பு அங்கே கிடைக்கவில்லை. சிவராமிற்கு வாழ்க்கையே வெறுத்தது. துறவியாகப் போனால் என்ன என்று கூட தோன்றியது. இவை தெரிந்தால் தன் தாயார் வருத்தமடைவார் என்று எல்லாவற்றையும் தன் மனதிலேயே புதைத்தான். வாழ்க்கை எனும் தூண்டிலில் புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்தான்.

** ** ** **

ஒரு நாள் சிவகாமி சமைத்துக் கொண்டிருக்கும் போது நெருப்பு வெக்கை பிடித்து மயக்கமுற்று விழுந்தாள். வீட்டில் சிவராமோ, சுவேதாவோ இருந்திருக்கவில்லை. பக்கத்து வீட்டு மைதிலி அடிக்கடி சுவேதாவிற்கு கதைப்புத்தகம் கொடுப்பதற்கு வீட்டிற்கு வருவதுண்டு. புத்தகங்களுடன் வந்த மைதிலி வீட்டில் யாரையும் காணாது தேடினாள். அங்கே மயக்கமுற்றுக் கிடந்த சிவகாமியைக் கண்டாள். ஓடிச் சென்று நீர் தெளித்து தட்டிப் பார்த்தாள் எதுவித அசைவும் இல்லை. மைதிலி தன் வீட்டிலிருந்தவர்களை அழைத்தாள். அவர்களின் உதவியுடன் யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதித்தார்கள். வைத்தியசாலையில் உங்கள் அம்மாவின் உடல் சரியாக வீக் ஆகியிருக்கிறது" என்றார் டாக்டர்.

"உங்கட அம்மாவிற்கு மருந்து வெளியிலிருந்து தான் எடுக்க வேண்டும். மருந்துக்கு 20000 ரூபாய் பணம் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தை உடனே கட்டவும்" என்றார். கையில் யாரோ தட்டியதைப் பார்த்து சிவராம் சுயநினைவிற்கு வந்தான். அங்கே தாயார் கையில் தேனீருடன் நின்றார்.

தேநீரைக் கொடுத்த சிவகாமி அங்கே உட்கார்ந்தார். கவலையான முகத்துடன் சிவராமை நோக்கினார்.சுவேதாவை கூட்டிக் கொண்டு வர சொல்லி சிவராமிற்கு கட்டளையிட்டார். இன்று உன் திருமண நாள் சுவேதாவுடன் பேசி சமாதானம் ஆகச் சொன்னார். சிவராமிற்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. தாயாரிடம் நீங்கள் யோசிக்க வேண்டாம். நான் கூப்பிட்டும் சுவேதா வரவில்லை. இனிமேலும் என் கௌரவத்தை விட்டு நான் அவளை கூப்பிட மாட்டேன் என்றான். சிவகாமியால் மனவேதனையை தாங்கவே முடியவில்லை. உன் சந்ததி வளர வேண்டும்" என்று அழுதார். சிவராமால் எதுவுமே பேச முடியவில்லை.

சிவராமிற்கு சுவேதா பிரிந்த அந்த நிகழ்வு மீட்டத் தொடங்கியது. சிவகாமி வைத்தியசாலையில் இருந்த நேரம் பணம் எடுப்பதற்காய் வீட்டிற்கு சிவராம் வந்தார். மாதக் கடை-சி என்பதால் சிவராம் சம்பளத்தை அலுமாரியில் வைத்து இருந்தார். அதை எடுப்பதற்காய் அலுமாரியை திறந்து பார்த்த சி-வராம் அதிர்ந்தார். அங்கே பணத்தைக் காணவில்லை. அலுமாரி முழுவதும் தேடினான் எதுவும் கிடைக்கவில்லை. முகம் முழுக்க வியர்த்தது. தாயை நினைத்து அழுதான்.

வெளியிலே ஆட்டோ சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தான். அங்கே சுவேதா புதுப் பொலிவுடன், முக அலங்காரங்கள் செய்து கொண்டு வந்தாள். உள்ளே வந்த சுவேதாவிடம் சிவராம் பணம் எங்கே என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவேதா இந்தப் பணம் என்னத்துக்கு காணும் எனக் கேலி செய்தாள். அதை நான் தான் மேக் கப் செய்வதற்கு எடுத்தேன் என்றாள். கோபம் கொண்ட சிவராம் அவளது கன்னத்தில் “பளார்”என்று அடித்து விட்டான்.

முக அலங்காரம் செய்து வந்த சுவேதாவின் முகம் சுருங்கியது. தன்னை அடித்ததற்கு கோபம் கொண்டாள். இனிமேல் நான் இந்த வீட்டில் இருக்க மாட்டேன் என்றாள். கோபம் கொண்ட சிவராம் “நீ எங்கேயாவது போ” என்று சத்தமிட்டான். சுவேதா உடனே அந்த வீட்டை விட்டு வெளியேறி விட்டாள். சிவராம் தன் நண்பனின் உதவியுடன் தன் தாய்க்கு மருந்து வாங்கித் தாயைக் காப்பாற்றினான். சுவேதா வீட்டை விட்டுச் சென்றதை அறிந்த சிவகாமி மனதால் கவலையடைந்தார். சிவகாமியின் கவ-லையை பார்க்க முடியாத சிவராம் சுவேதா வீட்டிற்கு சென்று வருமாறு அழைத்தான். சுவேதா “உன் கீழ்த்தரமான நடத்தை எனக்குப் பிடிக்கவில்லை நான் வரமாட்டேன்” என்றாள். கோபம் கொண்டு கத்தினாள். சிவராம் எதுவும் பேசாது வந்து விட்டான். போன் அடித்த சத்தம் கேட்டு சிவராம் சுய நினைவுக்கு வந்தான்.

போனில் சுவேதாவின் தாயார் சிவராமிடம் சுவேதாவைக் கூட்டிச் செல்லுமாறு கெஞ்சினார். சிவராம் எதுவும் பேசாது போனை வைத்து விட்டான். தன் கௌரவத்தை விட்டு அவளை ஏற்க அவன் மனம் மறுத்தது. சுவேதா ஒரு பிடிவாதக்காரி என்பதை நினைத்து வேதனையடைந்தான்.

சிவராம் “அழகான பெண் வேண்டும் என்று என் வாழ்க்கையை வீணாக்கிவிட்டேனே” என்று வருந்தினான். சுவேதா வீட்டை விட்டுப் போய் ஒரு வருடமாகியது. அவள் இனி வரவே மாட்டாள் என சிவராம் நினைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவேதா வீட்டிற்குச் சென்ற ஒரு மாதத்தில் மனதால் வேதனையை அனுபவித்தாள். சுவேதாவின் தங்கை சுவேதாவிற்கு முன்னமே திருமணம் செய்து கொண்டவள். சுவேதாவின் வீட்டிற்கு கையில் ஒரு குழந்தையுடன் வந்திருந்தாள். அவள் சுவேதாவிற்கு குடும்பம், வாழ்க்கை பற்றி ஆலோசனை வழங்கத் தொடங்கினாள். சுவேதா தன்னை விட வயது குறைந்தவள் திருமண வாழ்க்கையில் பொறுப்பாகவும், சந்தோசமாகவும் இருப்பதைப் பார்த்தாள். கணவரை விட்டுப் பிரிவது பெண்ணிற்கு அழகல்ல என்ற தங்கையின் வார்த்தைசுவேதாவை சுட்டது. நீ முகத்தை அலங்கரித்துக் கொண்டு இருக்கிறாய் ஆனால் உன் வாழ்க்கை அழகற்று இருக்கிறது என்றாள். தங்கையின் கணவன் ஒரு கூலித் தொழில் செய்பவர். அவருடனே தங்கை மகிழ்ச்சியாக ஆடம்பரமின்றி வாழ்வதை நினைத்து பெருமிதமடைந்தாள்.

சுவேதாவின் தாய் தினமும் திட்டித் தீர்த்தாள். கணவனை விட்டு இங்கு வந்துள்ளாய் என்று பேச்சினால் கொன்றாள். கணவனின் ஒரு அடியினால் வீட்டை விட்டு வந்தவள் சொல்லினால் பல அடிகளை தாங்குகிறாள். திருமணத்திற்கு முன் பாசமாக இருந்த தாய் தன்னை வெறுப்பதாக உணர்ந்தாள். சிவராமின் நல்ல மனம் அப்போதுதான் புரிந்தது. ஆடம்பர வாழ்க்கை எப்போதும் நிரந்தரமற்றது என யோசித்தாள். தன்னிடமிருந்த அழகுசாதனப் பொருட்களை எல்லாம் வீசினாள். வீட்டிற்கு வந்த எல்லோரும் ஏன் சுவேதா கணவனைப் பிரிந்தாள் என கேட்டு ஆலோசனையும் வழங்கினார்கள். சுவேதாவிற்கு அவமானமாயும் அருவருப்பாயும் இருந்தது. நினைத்த போது அவளது கௌரவம் தடுத்தது. மனதில் வேதனையடைந்தாள். சிவராமின் தாயார் சிவகாமி எப்படியாவது மகனையும், மருமகளையும் சேர்க்க வேண்டும் என்று முடிவெடுத்தார். அருகில் இருந்த அம்மன் கோயிலிற்கு சிவகாமி சென்றிருந்தார். மகனின் திருமண நாளிற்கு ஒரு அர்ச்சனை செய்ய நினைத்தார். கோயிலில்சுவேதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதபடி நெய் விளக்கு ஏற்றுவதைக் கண்டார். "என் கணவருடன் என்னை சேர்த்து வை அம்மா" இறைவனிடம் வாய் விட்டு அழுது கொண்டிருந்தாள். இதைக் கேட்ட சிவகாமியின் மனம் மகிழ்ச்சியில் பொங்கியது.

சிவகாமி சுவேதாவின் அருகில் சென்று "வீட்டிற்கு வா" என்றார். திரும்பிப் பார்த்த சுவேதா சிவகாமியின் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டாள். சிவகாமி மகிழ்ச்சியில் சுவேதாவை தன் மகள் போல ஏற்று வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கே சிவராம் இருக்கவில்லை. உள்ளே சென்ற சுவேதா தன் திருமணப் படங்களைப் புரட்டிப் பார்த்தாள். சிவகாமியை எந்த வேலையும் செய்ய விடாது தானே சமைத்தாள். தன் திருமண நாளிற்காக விதம் விதமான இனிப்பு வகை உணவுகளையும் தயாரித்தாள்.

வீட்டிற்கு வந்த சிவராம் தன் தாயிடம் "தனக்கு பசியில்லை தூங்கப் போகிறேன்" என்றான். சிவகாமியோ "நீ சாப்பிட வேண்டும். நீ சாப்பிட்டதன் பின் உனக்கு ஒரு பரிசு கொடுக்கப் போகிறேன்" என்றார். சிவராம் சாப்பாட்டு மேசையில் அமர்ந்தான். சாப்பாடுகள் விதம் விதமாக இருப்பதைக் கண்டு வியந்தான். ஒவ்வொருஉணவையும் சுவைத்தான். இது தன் தாயார் செய்யவில்லை எனப் புரிந்து கொண்டான். சிவகாமியிடம் இந்த உணவுகளை யார் செய்தது எனக் கேட்டான். சிவகாமி "இதை என் மருமகள் செய்தாள்" என்றார். இதைக் கேட்ட சிவராம் அதிர்ச்சியடைந்தான். சுவேதா உள்ளே இருந்து வந்தாள். சிவராமிற்கு வியப்பாக இருந்தது.

சுவேதா சிவராமைப் பார்க்கக் கூச்சப்பட்டாள். சிவகாமி "சுவேதா இந்த வீட்டிற்கு நல்ல மருமகளாய் வந்துள்ளாள்" என்றார். சுவேதா தான் அறியாமால் செய்த பிழைகளை மன்னிக்கமாறு கூறினாள். ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு என் வாழ்க்கையில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடத்தை வீணாக்கி விட்டேன் என்று வருந்தினாள். சிவராம் மனதில் மகிழ்ச்சி பொங்கியது. சிவராம் சுவேதாவை முழுமையாக ஏற்றான். என்ன இருந்தாலும் வீட்டை விட்டுப் போயிருக்கக் கூடாது என்ற சுவேதாவின் வார்த்தையைத் தடுத்தான். "நீ வீட்டை விட்டுப் போனதாலே தான் நல்ல மனைவியாக வந்துள்ளாய்" என்று பெருமிதம் அடைந்தான். இருவரும் தாயின் காலில் வீழ்ந்து ஆசிர்வாதம் பெற்றார்கள். கசந்து போன தம் திருமண வாழ்க்கையை திருமண நாளில் புதுப் பொலிவுடன் ஆரம்பித்தார்கள்.

**முற்றும்**

"அழகு ஆடம்பரம் என்பன வாழ்க்கைக்கு உகந்ததல்ல
என்றும் ஆபத்தை விளைவிக்கக் கூடியன"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரைப் பற்றி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்பக் கல்வித்துறை முகிழ்நிலை ஆசிரியை ஆகிய செல்வி குணாலினி குணரத்தினம் இலக்கிய வானில் பிரகாசித்து வரும் இளம் எழுத்தாளர். ராணி வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யா/இந்து மகளிர் கல்லூரியில் கலைத்துறையில் கற்றுத் தேர்ந்தவர். தனது பாடசாலைக் காலங்களில் ஆக்க இலக்கியங்களில் பங்கு கொண்டு பரிசில்களைத் தனதாக்கிக் கொண்டவர்.

சிறந்த கல்விப் புலத்தைச் சேர்ந்த இவரது குடும்பப் பின்னணி இவரது எழுத்தாற்றலைத் தூண்டக் காரணமாக இருந்தது. அத்துடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இவருக்குக் கிடைத்த அனுபவங்களும் வாய்ப்புக்களும் இவரை இளஞ் சிறு கதை எழுத்தாளராக அடையாளப்படுத்தின.

நவீன தொழில்நுட்ப யுகத்தில் சிறுகதை எழுதும் ஆர்வமும் வாசிக்கும் ஆர்வமும் குறைந்துள்ள இவ்வேளையில் இச் சிறுகதைத் தொகுப்பு காலத்தின் தேவையாகும். அமைதியானவர், ஆழமானவர் தன்னிடம் ஒப்படைக்கும் பணிகளைச் செவ்வனே செய்யும் பன்முக ஆற்றலுள்ளவர்.

இவருடைய "மௌனம் கலைந்தது" என்னும் சிறு கதைத் தொகுப்பு இவரது கன்னிப் படைப்பாகும். இது முகிழ்நிலை ஆசிரியராக இருக்கும் காலத்தில் வெளி வருவது இக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளது. இத் தடப்பதிப்பு பிற்காலத்தில் சிறுகதைத் துறையில் ஆல விருட்சமாக மிளிர்வதற்கான பலமான அத்திவாரமாகும். இவரின் அனுபவங்களின் தொகுப்பே இச் சிறுகதையின் உள்ளடக்க விசையாகின்றது.

**திருமதி. ஜெ. உதயகுமார் M.Phil.**
**சிரேஷ்ர விரிவுரையாளர்**
**(ஆரம்பக் கல்வித்துறை)**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org